# இரட்சணி

வெது ஆதிப

கடை திறப்புப் ப



V. C. TEYABALASINGAM.

## தட்டுங்கள் திறக்கப்படும்

உரை விளக்கம்:

பண்டிதர் க. வீரகத்தி

ஸ்ரீ லங்கா வெளியீடு
யாழ்ப்பாணம், இலங்கை.

# இரட்சணிய யாத்திரிகம்

1-வது ஆதிபருவம்

கடை திறப்புப் படலம்

சி. ஜெயபாலசிங்கம்

தட்டுங்கள் திறக்கப்படும்

உரை விளக்கம்:
பண்டிதர் க. வீரகத்தி

வெளியீடு:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

முதற்பதிப்பு : 1977
பதிப்புரிமை : உரைவிளக்க ஆசிரியருக்கு



ஸ்ரீ லங்கா அச்சகம்.
யாழ்ப்பாணம்.

# இரட்சணிய யாத்திரிகம்

அ

விண்ணக அரசை விழைந்த உண்மைக் கிறிஸ்தவன் ஒருவன் இவ்வுலக ஆசாபாச நெறிகளிலிருந்து விலகி, முத்திப் பேறடையும் வரை சத்தியவேத நெறிவழி தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்புகிறான். தான் ஈட்டிய பாவமெல்லாம் தன் முதுகின்மேல் இருந்து தன்னை அழுத்திக் கொள்வதாக உணர்கிறான். அவன் கையிலுள்ள விவிலிய வேதம், தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், மரணத்திற்குப் பின் நியாயத் தீர்ப்புக்குத் தான் ஆளாக வேண்டி வரும் என்றும் தெளிவாகப் புரிய வைக்கின்றது. எனவே, அவன் சிந்தனைகள் உலக வாழ்விலிருந்து முற்றுக விடுபடுகின்றன. மோட்சப் பிரயாணத்திற்கான சிந்தனைகள் புதிய தெய்விக யாத்திரை ஒன்றைத் தூண்டி அவ்வழியிலே அவனை இட்டுச் செல்கின்றன.

மோட்சவழி ஓர் ஒடுக்கமான இடுக்கமான நெறி. அந் நெறியில் அவன் எத்தனையோ தடைகளையும் இடர்களையும் அவலங்களையும் ஆக்கினைகளையும் எதிர்ப்படுகின்றான். சத்திய வேத நெறி ஒழுக்கத்தினால் அவற்றையெல்லாம் வெற்றிகண்டு மேலும் தன் யாத்திரையைத் தொடருகின்றான். இப்படி, பாவங்களிலிருந்து இரட்சிப்பு (மீட்சி) பெறவேண்டித் தன் வாழ்க்கை நெறியை மாற்றி அமைத்துக் கொள்ளும் ஒரு கிறிஸ்தவனின் சிந்தனை யாத்திரையை எச். ஏ. கிருஷ்ணபிள்ளை என்பவர் தமிழில் காவியமாகப் பாடியுள்ளார். இதுவே இரட்சணிய யாத்திரிகம் எனப்படும். இரட்சணியம் - இரட்சிப்பு.

இக்காவிய நாயகன் ஓர் உண்மைக் கிறிஸ்தவன் – மோட்சப் பிரயாணம் விழைந்த உண்மைக் கிறிஸ்தவன். இக்காவியத்திற்கு முதனூல் என ஆசிரியர் கூறிக்கொண்ட 'மோட்சப் பிரயாண' ஆசிரியர் இவனை 'ஆத்துமவிளரி' என அழைப்பர். இக்காவியம் நூலாசிரியராலேயே 1894 இல் முதன் முதலாகப் பிரசுரிக்கப்பட்டது.

## (ஆ) காவிய இயல்பு

(1) தமிழ்க் காவியங்கள் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இருவகையாக்கப்பட்டுள்ளன. இரட்சணிய யாத்திரிகம் பெருங்காப்பியத்திற்குரிய சில சில அங்கங்களைக் கொண்டிராவிடினும் 'இது ஒரு பெருங்காப்பியமே' என்று நூலாசிரியரே கூறுவர்.

''இரட்சணிய சமயக் கொள்கைக்கு அடாத்தும் அநாவசிய மானதுமான சில அங்கங்களையும், அநுசிதமான புனைந்துரை களையும் தவிர்த்து, உத்கிருஷ்டம் உள்ள

'தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
நாற்பொருட் பயக்கு நடைநெறித் தாகி'

என்ற இத்தியாதி புனித அங்கங்களெல்லாவற்றையும் தழுவி இயற்றப்பட்டது.

'கூறிய வுறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றென விளம்பினர் புலவர்'

என்பதனைற் பெருங்காப்பியமே'' என்க. நூலாசிரியர் முகவுரை யில் இப்படிக் கூறுவர். 'இந்நூலின் செய்யுள் நடை பெரும் பாலும் ஸ்ரீமத் கம்பராமாயணச் செய்யுள் நடையையும் அதன் போக்கையும் அநுசரித்தே இயன்ற மாத்திரம் அமைக்கப்பட்ட' தெனவும் மேலும் கூறியுள்ளார்.

(2) காவியப் பண்புகளைக் கவனிக்குமிடத்து இதனை ஒரு வரையறுக்கப்பட்ட காவியம் அல்லது ஒருமுனைக் காவியம் என்று குறிப்பிடுவது பொருத்தமாகும்போற் தெரிகிறது. நவரசங்களை யும் அவற்றுக்கான பல்வேறு நிகழ்ச்சிகளையும் இங்கு நாம் அநுபவிக்கவும் காணவும் முடியாது. பக்திச் சுவையும் அதற் கான அடித்தள விருத்தாந்தங்களுமே காவியம் அடங்கலும் ஊடறுத்துச் செல்வதை நிதானிக்க முடியும். தர்ம உபதேசமே காவிய நோக்கமாகக் கொள்ளப்பட்டிருக்கிற தெனக் கொள்ள முடியும். நாவல் இலக்கிய வரிசையில் டாக்டர் மு. வ அவர் களுக்குக் கொடுக்கும் இடத்தைக் காப்பிய இலக்கிய வரிசை யில் மகா வித்துவான் கிருஷ்ண பிள்ளை அவர்களுக்குக் கொடுப் பது இலக்கிய தர்மம் எனக் கருதலாம்.

(3) ஸ்ரீ கிருஷ்ணபிள்ளை இந்திய வைதிக சமய இலக்கியங் களில் நன்கு ஊறிவிட்ட பின், கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்து கொண்டது தமிழ்த்தாயின் நல் அதிட்டம் என்றே கூறவேண் டும். அவர்களுடைய கவித்துவ வேகமும் வளமும் தமிழ்க் காவிய வரிசையில் ஒருமுனையில், மிக உன்னத ஸ்தானத்தைப் பிடித்துக் கொண்டன. இரட்சணிய யாத்திரிகம் தமிழ்மொழி தனக்கெனப் பெற்றுக்கொண்டுள்ள அதி உன்னத பக்திக் காவி யம் எனப்படலாம். சேக்கிழாரின் பெரிய புராணத்துக்கு அடுத்த தாக பக்திக் காவிய வரிசையில் இதனைக் கொள்வது நியா யமே. சமயம் மாறவில்லையெனில் இது கிடைத்திருக்க முடியா தல்லவா.

கரடு முரடு இல்லாத அருவியோட்டமான செய்யுள்நடை உள்ளத்தைத் தொட்டு உலுப்புகின்றது; இதயத்தைக் கனிகனி யென்று கனிக்கிறது.

(4) இரட்சணிய யாத்திரையில், ஆங்காங்கே வடமொழி களும் வடமொழித் தொடர்களும் அதே ஒலியுடன் கையாளப் பட்டுக் காவிய நடைக்குக் கனிவும், காவியச் சுவைக்கு எடுப் பும் தருகின்றன. அவையும் காவியம் முழுவதும் ஆத்தும விகாரியுடன் சேர்ந்து யாத்திரை செய்கின்றன.

(5) காவியத்துக்குரிய மற்றோர் இயல்பு தெளிவும் எளிமை யும் என்க. கிறிஸ்தவ சமய ஆசாரங்களைப் பற்றியும் சுவி சேடத்தைப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொண்டவர்கூட இன் னெரு உதவியின்றிக் காவியத்தைப் புரிந்துகொள்ள முடியும். கையிலே ஒரு சிறு தமிழ் அகராதியிருந்தாற் போதும் காவி யத்தைப் படித்துவிடலாம். பாரதி இலக்கியங்களில் காணப் படும் எளிமையைச் சற்றுக் குறைவாக என்றாலும் இரட்சணிய யாத்திரிகத்திற் காண முடியும்.

(6) கிருஷ்ணபிள்ளைக்கு முன்புள்ள காவிய கர்த்தாக்கள் பக்தி இலக்கிய ஆசிரியர்களின் கருத்தும் பொருளும் சொற் றொடர்களும் கிருஷ்ணபிள்ளையின் காவியத்தில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. இவைகள் ஆங்காங்கே 'அரதனகசிதம்' போலப் பொருத்தப்பட்டுள்ளன எனவும், இடையிடையே இவை கள் மிளிரக் காணலாம் எனவும் ஆசிரியரே கூறுவது கவனிக்கத் தக்கது. இலக்கிய நேர்மை நெஞ்சத்தை யாரும் பாராட்டாது இருக்க முடியாது.

(7) செய்யுளில் வரும் சீரமைப்பைப் பொறுத்த வரையில் 'வகையுளி'ச் சீர்கள் அதிகம் இடம்பெறுவது கவிதையின் ஆரோக் கியமான நடையெனக் கூற முடியாது. ஒரு முழுமையான சீரைச் சிதைத்து அதற்கு முன்னுள்ள சீருடனும் பின்னுள்ள சீருடனும் சேர்த்து விடுவது வகையுளி என்று சொல்லப்படும். இவ்வகை அமைப்பைக் கிருஷ்ணபிள்ளை காவியத்தில் அடிக்கடி அதிகம் சந்திக்கிறோம். சந்தித்தாலும், ஓசைவளம் ஊனமடைய வில்லை.

(8) ஆங்காங்கே கிறிஸ்தவ தேவாரப் பாடல்களையும் கொடுத்து அடியவர்கள் பக்தி விறுவிறுப்புக் கொள்ளச் செய் திருப்பது காவிய நோக்கத்தை வளர்த்துக் கொள்வதற்கான இன்னெரு இயல்பெனக் குறிப்பிட வேண்டும். பொருளுக்குத் தக்கதாக ஆங்காங்கே வெவ்வேறு ஓசை விகற்பங்களைக் கொண் டிருப்பதும் பக்திச் சுவையூட்டத்திற்கே என்று கருதலாம்.

(9) கிறிஸ்தவ தமிழ்க் காவிய வரிசையில் கிருஷ்ணபிள்ளை யின் பங்களிப்பு என்ன என மட்டிடும் முயற்சியால் காவிய ஸ்தானத்தையும் மட்டிட்டுவிடலாம். வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணி 1848இல் முதன் முதல் வெளிவந்தது. இதுவே தமிழில் முதன் முதல் வெளியிடப்பட்டுள்ள முழுமையான காவியமும் ஆகும். இதனை அடுத்து வந்த கிறிஸ்தவ தமிழ்க் காவியம் 1866 இல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ள திருவாக்குப் புராணம் எனக் கூறுவர். திருவாக்குப் புராணத் திற்குப் பின் வெளிவந்த மற்றொரு கிறிஸ்தவ காவியம் சுவி சேட புராணம் எனவும் கூறுவர். 1891 இல் கிறிஸ்து மான்மியம் என்னும் மற்றொரு காவியமும் வெளியிடப்பட்டுள்ளது. இதற் குப் பிறகு வந்ததுதான் கிருஷ்ணபிள்ளையின் இரட்சணிய யாத் திரிகம் (1894). தேம்பாவணிக்கும் இரட்சணிய யாத்திரிகத் திற்கும் இடையில் கிறித்தவ காவியங்கள் பல வந்துள்ளன வானாலும், யாத்திரிகத்தின் பின் பல கிறித்தவக் காவியங்கள் எழுந்தவையானாலும் தேம்பாவணிக்கு அடுத்ததாக இரட்சணிய யாத்திரிகம் மதிக்கப்படுகிறது எனக் கிறிஸ்தவ அறிஞர்களிற் பலர் கூறுகின்றனர். ஆயின் தேம்பாவணியையும் இரட்சணிய யாத்திரிகத்தையும் ஒப்பிட்டு நோக்கும் முயற்சி தேம்பாவணி யிலும் சிறந்தது இரட்சணிய யாத்திரிகம் எனக் கொள்ள இடம் தருகிறது. மேலே குறிப்பிட்டுள்ள இயல்புகளுடன் சொல்லாட்சியையும் சேர்த்துப் பார்த்தல் அவசியம். தேம்பா வணியை அகராதி வார்த்தைகள் அதிகமாகப் படையெடுத்து முற்றுகையிட்டதை அவதானிப்பதில் சிரமமேதும் இல்லை. அக ராதி கண்ட கவிஞரல்லவா தேம்பாவணி ஆசிரியர். அகராதி வார்த்தைகளை அதிகம் கையாண்டது தேம்பாவணிச் சிறப்பைப் பலபடி கீழே கொண்டுவந்து விட்டதென்று சொல்வது தப்பா காது.

1894-ம் ஆண்டு வெளிவந்த இரட்சணிய யாத்திரிகத்திற்கு மறைத்திரு T. உவாக்கர் ஐயர் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதியை அனைவரும் அறிந்து கொள்வது தேம்பாவணி, இரட் சணிய யாத்திரிக ஒப்புநோக்கு முயற்சிக்குப் புது ஆவேசத்தை அளிக்கலாம். வாக்கர் கூறுவது:

''தமிழ் நாட்டுக் கிறித்தவர்களுக்கு அவர்கள் தாய்மொழி யில் சிறந்த இலக்கியங்கள் இதுகாறும் ஏற்படவில்லை. வெளி வந்துள்ள ஒரு சில இலக்கியங்களும் ஆங்கில இலக்கியங்களின் மொழிபெயர்ப்பேயாய் யாவர்க்கும் பயன்படுமாறு இல்லை. அன்றியும் அவை தமிழ் நடைக்கேற்ப எழுதப்படவுமில்லை.

அக்குறையை நீக்குவான் எழுந்த முதல் முதல் கிறித்துவ காவியம் எச். ஏ. கிருஷ்ணபிள்ளை எழுதிய இரட்சணிய யாத்திரிகமாகும். இஃது கிறித்தவ சமயக் கருத்துக்களைத் தமிழ் நாட்டிலுள்ள அனைவரும் அறிந்து பயனடையுமாறு தமிழ்க் காவிய நடையில், புனைந்துரைகளும், பொருந்தாத கற்பனைகளுமின்றி, யாவரும் எளிதில் படித்துப் பயனடையுமாறு எழுதப்பட்டுள்ளது. காலத்திற்கேற்ப வடமொழிகள் மிகுதியும் கலந்து, எழுதப்பட்டுள்ளமை கவிநயத்திற்கு ஒரு தனிச் சிறப்பைத் தந்துள்ளது.''

## (இ) காவியம் பாடுவதற்கான காரணமும் காவிய மூதலுல்களும்

இரட்சணிய யாத்திரிக ஆசிரியர் திரு. எச். ஏ. கிருஷ்ணபிள்ளை (1827 - 1900) பிறந்த ச(சை)மயம் வைஷ்ணவம். இறந்த ச(சை)மயம் கிறிஸ்தவம். 1868ஆம் ஆண்டு ஹென்றி அல்ஃபிரட் என்ற பெயருடன் ஞானதீட்சை பெற்றுக் கத்தோலிக்க மதத்திற் சேர்ந்தவர். நெறி மாறினும் நன்னெறியில் வாழ்ந்தவர். கிறிஸ்தவ அநுபூதி ஞானத்தைப் பற்றி அவரே கூறியிருப்பது:

''அன்றே யான் பூர்வத்தில் தெரியாது ஓழுகிவந்த இந்து மதானுசாரச் சடங்குகளெல்லாம் என் மனதை விட்டு ஓழிந்தன. மார்க்க சின்னங்களும் என் சரீரத்தை விட்டுப் பறந்தன. வெகுகாலமாக என்னைப் பந்தித்திருந்த ஜாதிக்கட்டும் ஓழிந்தது. இவ்வாறு சர்வ வல்லவரது திருக்கரம் அங்கங்கே நேர்ந்த பல விக்கினங்கள், தடை, இடையூறுகள் முதலிய எல்லாப் பிரதி பந்தங்களையும் சேதித்துப் பெருவழியினின்று ஒதுக்கி, இடுக்கவழி முகப்பின் திருக்கடையிலுள்ள ஜீவ வெளிச் சத்தண்டையில் கொண்டுவந்து சேர்த்தது.''

இப்படியாக இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கருகே வந்து விட்ட கவிஞர் தன்னைத் தடுத்தாட்கொண்ட கிறிஸ்துவின் திருவடிக்கு, நன்றிக் காணிக்கையாகச் செந்தமிழ் மாலையொன்று புனைய எண்ணி, இரட்சணிய யாத்திரிக மலரைச் சாத்துவதாகக் கூறுகின்றார். காவியச் சிறப்புப் பாயிரச் செய்யுளொன்று இதனைத் தெளிவாகச் சொல்கின்றது.

''என்னனைய பாவியரிந் நிலவுலகில்
யாண்டுமிலர் எனினும் நாயேன்
தன்னையொரு பொருளாகத் தடுத்தாண்ட
இறிஸ்து யேசுசாமி செய்ய

பொன்னனைய திருவடிக்குச் செந்தமிழ்
மாலிகையொன்று புனைவான் எண்ணி
துன்னுதவ ரட்சணிய யாத்திரிக
மலரெடுத்துத் தொடுக்க லுற்றேன்''

திரு. கிருஷ்ணபிள்ளையும் தடுத்தாட் கொள்ளப்பட்டவராம். அவர் காவியங் கண்டதை நினைக்கும் பொழுது, சைவநெறி மக்கள் மனதில் சுந்தரமூர்த்தி நாயனார் நினைவு கண்டிப்பாக வரத்தான் செய்யும். தடுத்தாட் கொள்ளப்பட்ட முறையும் வழியும் வேறுயினும் இருவரும் ஆட்கொள்ளப்பட்டவர்கள் தானே. அத்துடன், சுந்தரமூர்த்தி அடிகள் பெரிய புராண மென்கின்ற பாரகாவியத்திற்கு, ''தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' எனத் தொடங்கும் பதிகம் பாடிக் கருவிட்டவர். கிருஷ்ணபிள்ளை பரதேசியின் மோட்சப் பிரயாணத்தைக் காவியமாக்கி அதற்கு எருவிட்டவர். இவ்வேறுபாடு தமிழவலால் நேர்ந்திருக்க வேண்டும்.

இரட்சணிய யாத்திரிகம் தமிழ்ற் காவியமென முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. எதனை அல்லது எவற்றைத் தமிழப் பட்டது என்ற வினவுங்கூடவே எழுகின்றது. கிருஷ்ணபிள்ளை அவர்களே இரட்சணிய யாத்திரிக முதற்பதிப்பு முகவுரையில் அதற்கு விடை சொல்லி வைத்துவிட்டார்.

இரட்சணிய வேதத்தின் உத்தர பாகமாகிய (1) சுவிசேஷ சத்தியத்தையும், ஆங்கில பக்த சிரேஷ்டரொருவர் இங்கிலிஷ் பாஷையில் வாசக ரூபமாக, அதியுசிதமாக, வெகு விநயமாக வரைந்து தந்த (2) 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்ற கிரந்த மொன்று அநேக பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கி வருமாறு தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெகுகாலமாய் இந்நாட்டிற் பயன்பட்டுவருகிற (3) 'மோட்சப் பிரயாணம்' என்ற புஸ்தகத்திலடங்கிய அருமையான பொருளையும், அதன் கருத்தையும் தழுவித் தேவகிருபையை முன்னிட்டு இரட்சணிய யாத்திரிகம் என்ற இந்நூலினைச் செய்யுட்பாவாக எழுதத் துணிந்தேன்! ஆகவே, சுவிசேஷ சத்தியத்தைப் பற்றியும், 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' மோட்சப் பிரயாணம் என்னும் நூல் களைப் பற்றியும் சிறிதளவாவது அறிதல் வேண்டும்.

## (1) சுவிசேடங்கள் (GOSPELS)

கிறிஸ்தவர்களுடைய வேதநூல் ஆங்கிலத்திற் 'பைபிள்' எனவும், தமிழில் பரிசுத்த வேதாகமங்கள் எனவும், விவிலிய வேதம் எனவும் அழைக்கப்படும். இது பழைய ஏற்பாடு (Old Testament), புதிய ஏற்பாடு (New Testament) என்ற இரு பகுதிகளைக் கொண்டது. பழைய ஏற்பாடு கிறிஸ்துவிற்கு முற் பட்ட காரியங்களைக் கூறுவது. 'ஆதியிலே தேவன் வானத்தை யும் பூமியையும் சிருஷ்டித்தார்' என்பது தொடக்கம், மனித வரலாற்றில் தோன்றிய முது பெரியார்கள் அவர்களுடைய அறிவுத் திரட்டு, நியாயப் பிரமாணங்கள், ஆன்றோர் வாக்கு கள் முதலியன இடம் பெற்றுள்ளன. ஆதியாகமந் தொடக்கம் 'மல்கியா'வின் ஆகமம் முடிய முப்பத்தொன்பது ஆகமங்களா கப் பழைய ஏற்பாடு முடிகின்றது.

புதிய ஏற்பாடு கிறிஸ்துவிற்குப் பின் நிகழ்ந்தவற்றைக் கூறுவது. அஃதாவது கிறிஸ்துவின் உபதேசங்களையும் அவர் வாழ்க்கை வரலாற்றையும் முழுமையாகக் கூறும் சுவிசேடங் கள் புதிய ஏற்பாட்டின் முதற் பகுதியும் முதன்மையான பகுதி யுமாகும்.

சுவிசேடமென்பதற்கு 'நற்செய்தி' எனப் பொருள் சொல் லப்படுகின்றது. ஆனால் சுவிசேடமென்ற சொற்களின் கருத் தைச் சற்று ஆழமாக அறிதல் வேண்டும். சுவிசேடம் சு + விசேட மெனப் பிரியும். சு நன்மை என்ற கருத்தைத் தரும் வட மொழி உபசர்க்கமாகும். [உபசர்க்கம் – வடமொழி முதனிலை அடைமொழி (Prefix)] விசேடம் – சிறப்பு. எனவே முடிவான நன்மையும் முடிவான சிறப்பும் (விண்ணக அரசில் வீற்றிருத் தல், மோட்சம்) தருவதற்குக் காரணமான யேசுவின் உபதே சங்களும், வாழ்வும் என்பதே சுவிசேடமென்பதின் நிறைவான கருத்தாகும். Gospel என்ற ஆங்கிலப் பதத்திலும் சுவிசேஷம் என்ற மொழிபெயர்ப்பு கருத்துப் புஷ்டியானது போற் தெரி கிறது.

விசேடம் – சிறப்பு

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு" [திருக்குறள் 358]

சிறப்பென்னுஞ் செம்பொருளென்பதற்கு, வீட்டிற்கு நிலைத்த காரணமாய செல்லிய பொருள் எனப் பதவுரை கூறும் பரிமே லழகர், "எல்லாப் பொருளினும் சிறந்ததாகலால் வீடு சிறப்

பெனப்பட்டது.'' எனச் சிறப்பு என்ற சொல்லிற்கு விளக்கந் தந்ததுமறிக.

''சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

என்ற தொல்காப்பியர் சூத்திரப் (தொல் – பொருள் 192) பகுதிக்கு உரை கூறும்பொழுது, 'சிறந்தது' என்ற சொற்குச் 'சிறந்த வீட்டின்பம்' என்றே நச்சினர்க்கினியரும் பொருளுரைத்தமை தெரிக.

முதலாம் சுவிசேடம்

புனிதர் மத்தேயு (Mattew) என்பவரால் எழுதப்பட்டது. யேசுவின் பன்னிரு சீடர்களில் இவர் ஒருவர். ஆலயத் துறையில் வேலை செய்துகொண்டிருந்தவர். வேலைத் தலத்திலேயே இயேசு இவரைக் கண்டு தம்மைத் தொடருமாறு அழைத்தார். இவரும் தொடர்ந்து சீடரானார்.

இரண்டாவது

புனிதர் மாற்கு என்பவரால் எழுதப்பட்டதாகும். மாற்கு இயேசுவின் நேரடிச் சீடர் அல்லர். சீடரின் சீடர் ஆவர் – புனித இராயப்பரின் சீடர்.

மூன்றுவது

புனிதர் லூக்காசு என்பவரால் எழுதப்பட்டது. இவரும் மாற்கு என்பவரைப்போலவே சீடரின் சீடர் – புனிதர் சின்னப்பரின் சீடராவர். அப்போஸ்தலர் நடபடியை எழுதியவரும் இவரேயாவர்.

நான்காவது

புனிதர் அருளப்பரால் எழுதப்பட்டதாகும். யோவான் எனவும் இவர் அழைக்கப்படுவார். புதிய ஏற்பாட்டில் யோவான் சுவிசேடம் என்றே எழுதப்பட்டுள்ளது. இயேசுவின் முதற் பன்னிரு சீடர்களில் ஒருவர்; முதன்மையானவர். இரட்சகர் உயிர் போன சமயத்தில் சிலுவையடியில் நின்ற ஒரேயொரு சீடர் இவரேயாவர். இவரிடமே நம் அன்னையை ஒப்படைத்தார் இயேசுநாதர்.

## (2) *Pilgrim's Progress*

இந்நூல் 17-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வசித்த சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராய ஜோன் பன்யன் (John Bunyan) என்பவரால் எழுதப்பட்டது. (உலகப் புகழ்பெற்ற மகாகவி மில்ரனும் இவர் காலத்தவரே) பாத்திரங்களைச் செப்பனிடும் தொழிலாளியின் மகனாகப் பிறந்த பன்யன் இராணுவத்தில்

பணிபுரிந்தவர்; பின்பு இராணுவத்திலிருந்து விலகி மதபோதக ராளர். அநுபூதிமானகிய பன்யனின் பிரசாரம் கிறிஸ்தவ திருச்சபைக்கு விரோதமாகத் தோன்றவே, பிரசாரத்தை நிறுத் தும்படி தடை உத்தரவு விதிக்கப்பட்டது. பன்யன் அதனை மீறவே, பன்னிரண்டு ஆண்டுகால சிறைத் தண்டனைக்கு ஆளா ளர். சிறையிலிருந்து கொண்டே பன்யன் மேற்படி நூலை எழுதினர்.

ஒரு கிறிஸ்தவன் – தன் ஆன்ம ஈடேற்றம் பற்றிய விசா ரம் கொண்ட ஒரு கிறிஸ்தவன் சிந்தனை யாத்திரை செய்வதா கக் (கற்பனைக்) கனவு கண்டுகொண்ட பன்யன் எழுதிய இந் நூல் சொப்பனப் பிரபந்தம் என்றும், சொப்பனபாவனை சரி தம் என்றும் கூறப்படும். பல்வேறான மனித இயல்புகள் பாத் திரங்களாக உருவகிக்கப்பட்டுள்ள இக்காவியம் சிறந்த உள் ளுறைகளைக் கொண்டது. கிறிஸ்துவின் நெஞ்சத்தைக் குழப்ப மான அபிப்பிராயங்களிலிருந்து பிரித்துக் காட்டி, இனங்கண்டு விளக்குவதான இந்நூல் சிறந்த வாழ்வுக்கு வெளிச்சங் காட்டு கின்றது. பக்கத்துக்குப் பக்கம் சிந்தனை முத்துக்கள் சிதறிவிடப் பட்டுள்ளன. பன்யன் கூறுவது போல் மாசுண்டதாகக் கருதப் பட்டாலுங்கூட 'பொன்பொடிகளை' எறிந்துவிடக் கூடாது.

பன்யன் நூக்கத்திற் கண்டபாவனைச் சரிதத்தை, கிருஷ்ண பிள்ளை காவியமாக்கித் தமிழ் மொழியைப் பயில்வோருக்கும் நூக்கிக் காட்டியுள்ளார்.

மானுடத்துள் அடங்கியுள்ள ஆசாபாசங்களையும், மிருது வான நல் இயல்புகளையும் பாத்திரங்களாக உருவகித்துக் கொண்டு, ஆத்தும விகாரியின் மோட்சப் பயணத்தைப் பாவனை பிரபஞ்சத்திலேயே நடத்தி முடித்த பன்யன் தன் காவிய வாசகனுக்குக் கூறிய செய்தி மிக ரசமானது, ஆழமானது:

"வாசிக்கிறவனே! இப்பொழுது என் சொப்பனத்தை உனக்குச் சொல்லிப்போட்டேன். அதின் தாற்பரியத்தை எனக்காவது உனக்காவது உன் பிறனுக்காவது விபரிக்கக் கூடுமா என்று பார். ஆனல் தப்பாய் மாத்திரம் தாற்பரி யம் பண்ணுதே. தப்புத் தாற்பரியம் உனக்கு நன்மையை உண்டாக்குகிறதற்குப் பதிலாக தீமையையே உண்டாக் கும். மேலும் என் சொப்பனத்தின் வெளித்தோற்றங்களிலே உன் மனதை வெகுதூரம் செலுத்திவிட வேண்டாம். என் உபமானங்களும் ஒப்பனைகளும் உன்னைச் சிரிக்கப்பண்ணவும் குழப்பிப்போடவும் வேண்டாம். இந்தக் குணத்தைப் பையன் களுக்கும் பைத்தியக்காரருக்கும் விட்டுவிடு. நான் எழுதும்

சங்கதிகளின் சாரத்தை மாத்திரம் பிடித்துக்கொள். திரையை நீக்கிவிட்டு, திரைச் சீலைக்குள்ளே பார். என் ஒப்பனைகளை உருட்டிப் புரட்டிப் பரிசோதனை செய். அப் போது உத்தம இருதயத்தை எவ்விடியான ஆதாரங்களைக் கண்டடைவாய். அதில் எதாவது மாசுகளைக் கண்டுபிடித் தால் அவைகளைத் தூர எறிந்துவிட அஞ்சவேண்டாம். ஆனல் அதிலுள்ள பொன்பொடிகளைக் கூட எறிந்து போடாதே. என் பொன் கல்லோடு கலந்திருந்தால்தான் என்ன? கொட்டையைத் தொட்டு பழத்தை எறிந்துவிடு வார் இல்லையே. ஆனல் எல்லாவற்றையும் நீ எறிந்துவிடு வது உண்டானல், நான் மறுபடியும் ஒருதரம் சொப்பனம் காணவேண்டியதே அல்லாமல் வேறுவழி இன்னதென்று எனக்கே தெரியவில்லை என்பதே.'' (மோட்சப் பிரயாணம்: பக். vii. 1963)

## (3) பரதேசியின் மோட்சப் பிரயாணம்

Pilgrim's Progress இன் மொழிபெயர்ப்பாகிய பரதேசியின் மோட்சப் பிரயாணம் என்னும் நூலே கிருஷ்ணபிள்ளையின் இரட்சணிய யாத்திரிகத்துக்கு முழுமையான முதனூலாகும்.

Pilgrim's Progress இன் முதற்பகுதி மொழிபெயர்க்கப்பட்டு 1793 இல் வெளிவந்தது. முழுமையான மொழிபெயர்ப்பு நூல் முதன் முதலாக 1853 இல் யாழ்ப்பாணம் மானிப்பாய் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மானிப்பாயில் வெளி யிட்ட இப்பதிப்பே கிருஷ்ணபிள்ளையின் காவியத்திற்கு முத னூலாய் இருந்திருக்க வேண்டும். இப்பொழுது பலராலும் ஏற் றுக் கொள்ளப்பட்ட 'மோட்சப் பிரயாணம்' வண. எஸ். பவுல் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டதேயாகும். இதன் முதற் பதிப்பு ஆண்டு 1882.

### கதாபாத்திரங்கள்

[கடை திறப்புப் படலத்தில் வரும் கதாபாத்திரங்களைப் பற்றிய விளக்கமே இங்கு தரப்படுகிறது.]

(1) ஆத்தும விகாரி:

விண்ணக வாழ்வை விரும்பிக்கொண்ட ஒரு கிறிஸ்தவன், தான் செய்துகொண்ட பாவங்கள் ஒரு பெரும் பாரச் சுமை யைப் போல் தன்னை அங்கிங்கு அசையவிடாமல் கீழுக்குக் கீழுக்கு இருத்துகிறது என உணர்ந்து கொண்டவன். ஆத்தும – ஆன்மா. விகாரி – விகாரத்தையுடையவன். ஆன்ம சுத்தம்

பற்றிய விசாரணையும் கவலையும் கொண்டவன். விசாரம் – விசாரணை, கவலை.

(2) சுவிசேடகன் (*Evangelist*): ஒரு உண்மை உள்ள தேவ ஊழியக்காரன்.

(3) மென்னெஞ்சன் (*Pliable*): மற்றவனுடைய போதனைக்கு லேசாய் மனம் சாய்க்கிறவனைக் குறிக்கும் (லேசாய் எடு படும் மன இயல்பு). அவனை இரட்சணிய விசாரணையின் வழிக்குக் கொண்டுவருவது லேசாய் இருந்தாலும் மெய் யான கிருபை அவன் இருதயத்தில் இல்லை. எந்தவிதமான துன்பமும் இரட்சணிய விசாரணையை அவனிலிருந்து விலக்கி விடலாம். இணங்கு நெஞ்சன் எனக் குறிப்பிடுவர் திரு. எஸ். பவுல்.

(4) சகாயர் (*Mr. Help*): ஆத்தும ஆபத்துக்களினுல் வருந்து கிறவர்களை ஆறுதல்படுத்துகிற இயேசுகிறிஸ்துவை அல் லது அவர் பிரயோகிக்கும் பல ஏதுக்களைக் குறிக்கும்.

(5) லோக விவகாரி (*Mr. Worldly Wiseman*): தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்யும்படி பிரயாசப்படு கிறவர்களைக் குறிக்கிறது. அவர்கள் உலக விஷயங்களில் விவேகமுடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் கூடிய மட்டிலும் சன்மார்க்கராய் நடந்து, தேவபக்திக் கடுத்த சில கடமைகளை அநுசரித்து வரலாம்; ஆனல் தங்க ளுடைய லோக வாழ்வைத் தடுக்கும் விஷயங்கள் எவை களையோ அல்லது அவர்கள் மனதை அதிலிருந்து பிரியப் பண்ணும் எத்தனங்கள் எவைகளோ அவைகளுக்கு அவர் கள் நேர்விரோதம் பண்ணுவார்கள்.

(6) நடை நாவலன் (*Good - Will*): பட்சதாபன் என்பர் பவுல். தேவன், இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பாவிகள் மேல் வைத்த அன்பைக் குறிக்கும்.

(7) மெய்ப்பொருள் விளக்குபவன் (*Interpreter*):

வியாக்கியானி என்பர் 'மோட்சப் பிரயாண' ஆசிரியர்; சத்திய வேதத்தின் மூலமாய்ப் பரிசுத்த ஆவியானவர் பாவிக்கு உணர்த்தும் போதனைகளையும், தேவ ஊழியக்காரரையும் ஜெபம் தியானம், ஞானப்பியாசங்களையும் வியாக்கியானி என உருவகப் படுத்தப்பட்டுள்ளது.

## சிறுகுறிப்பு

(1) நொதி (*Slough of Despond*): நம்பிக்கை இழவு என்பர் பவுல். புதிதாய் மனந் திரும்புகிறவர்களுக்கு உண்டாகும் பலவித பயங்கரங்களைக் குறிக்கும். அவர்கள் தங்கள் நீச நிலைமையைத் திட்டமாய் அறிந்து, நமக்கேது நம்பிக்கை இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் எவ்வளவுக்கு முயற்சி செய்கிறார்களோ அவ்வளவுக்கு நம்பிக்கை இல்லாதவர்கள் ஆகிறார்கள்.

(2) தட்டுங்கள் திறக்கப்படும்:

தட்டுதல் என்பது இயேசுகிறிஸ்துவின் மூலமாய் பாவ மன்னிப்பைப் பெற வேண்டுமென்று கனிவோடு ஜெபம் செய்வதாகும். (வாசல்) திறக்கப்படுதல் என்பது சரியான வழியாக இயேசுவின் இடத்தில் வருகிற ஒவ்வொருவனும் ஏற்றுக் கொள்ளப்படுவான் என்பதாகும்.

(3) இடுக்குவழி: இது பரிசுத்தமான ஜீவனத்தைக் குறிக்கும். (பாவவழி விரிவானதும் கோணலானதுமாய் இருக்கும்.) இடுக்குவழி நேர்வழி, நெருக்கவழி, முத்தி நகரத்திற்குச் செல்வழி, ஜீவவழி என இரட்சணிய யாத்திரிக ஆசிரியரால் பலவாறு கூறப்பட்டுள்ளது. (51)

(4) பெயல் செபூலின் அம்புகள்: "அலகைக்கிறைவன் விசிகும்" (23) எனக் கிருஷ்ணபிள்ளை கூறுவர். சாத்தான் பொல்லாத நினைவுகளை மனுஷருடைய உள்ளத்தில் எழுப்பிவிட்டு, அவர்களைக் கிறிஸ்துவினிடம் வரவிடாமல் அதைரியப்படுத்தித் தடுப்பதைக் குறிக்கிறது.

---

## கடை திறப்புப் படலம்

கடை - வாயில் (வாசல்). இங்கு முத்திக்குச் செல்லும் வாயிலைக் கருதும். படலம் - பகுதி. முத்திக்குச் செல்லும் வாயிலைத் திறந்த செய்தியைக் கூறும் பகுதி **கடை திறப்புப் படலம்** எனப்பட்டது. முத்திக்குச் செல்லும் வாயில் 'மெய்ஞ்ஞான மார்க்கம்' ஆகும்.

உலக வாழ்வில் உழன்று பாவங்களை மிதமிஞ்சி ஈட்டிக் கொண்ட கிறித்தியான் (கிறிஸ்தவன்) ஒருவன் உடல் ஒம்புதலையும், உடல் இன்பங்களையும், அதற்கான அகப்புறச் சூழ்நிலைகளையும் மனதார வெறுத்தான்; விண்ணக அரசை (முத்தி) விழைந்தான். சுவிசேடகன் ஒருவனின் மெய்யுபதேசத்தைப் பெற்றான். அவனின் வாழ்க்கைப் போக்கும் நோக்கும் மாறியது. சுவிசேடகன் கூறிய வழியே தன் ஆன்மிக யாத்திரையை ஆரம்பித்தான். முத்தி நகரை (Mount Zion) நோக்கிச் செல்கின்றான்.

செல்லும் வழியில் முத்திக்குச் செல்லும் குறுக்குவழி இதுவென இலௌகீகன் என்பவன் மற்றொரு வழியைக் காண்பித்தான். இலௌகீக(ன்) வழியிற் சென்ற கிறித்தியான் மிகப் பயங்கரமான ஒரு மலையடிவாரத்தை அடைந்தான். அந்த மலை அவன் தலையின்மீது விழ இருப்பதுபோலக் காணப்பட்டது. கிறித்தியான் அஞ்சினான். அச்சத்தில் அங்கிங்கு நகராமல் அப்படியே அசைவற்று நின்றான். அந்த நேரத்தில் சுவிசேடகன் மீண்டும் அவன்முன் தோன்றினான். சரியான பாதையைத் தவறவிட்ட அறியாமைக்காக அவனைக் கடிந்து கொண்டான். அந்த வழியிலிருந்து அவனைத் திருப்பி, தான் முன்னர் உபதேசித்த நெறியிலே செல்லும்படி கிறித்தியானை அனுப்பி வைத்தான்.

சுவிசேடக(ன்) வழியே மீண்டும் யாத்திரையை ஆரம்பித்தான் கிறித்தியான். யாத்திரைப் பாதையிலே அவனுக்கு எதிராக ஒரு திட்டி வாயில் தோன்றியது. அதன் வழியே யாரும் உள்ளே செல்ல முடியாதபடி அவ்வாயிலின் கதவு பூட்டப்பட்டிருந்தது. கிறித்தியான் அந்தக் கதவுக்கு அண்மையில் வந்து அதைத் தட்டி கதவைத் திறக்கும்படி வேண்டிக் கொண்டான். உள்ளே இருந்த கடைகாவலன் (வாயிற் காவலன்) வாசலைத் திறந்து, கிறித்தியான் கையைப் பிடித்து, சரேலென அவனை உள்ளே இழுத்துக் கொண்டான். கொண்டதுமன்றி, வாயிற் கதவையும் முன்போற் பூட்டிவிட்டான். பின்பு, அந்த வாயில் வழியே இதற்கு முன்வந்த

ஆபிரகாம் முதலியோர் பட்டபாடுகளை (துன்பங்களை) யெல்லாம் கிறித்தியானுக்கு விவரித்துவிட்டு, அவனை **வியாக்கியானி** என்பவரிடம் அனுப்பி வைத்தான்.

திட்டி வாயிலின் பெருமையும், அதன் வழியே வந்த ஆபிரகாம், மோசே, தானியேல், சாற்றுக், இஸ்தேவான், பவுல், கிறிஸ்துநாதர் ஆகியோர் அநுபவித்த பாடுகளும், மென்னெஞ்சன், இலௌகீகன் ஆகிய இருவரின் இயல்புகளும் இப்படலத்துள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

## (1) கிறித்தியான் திட்டிவாயிலை அடைதல்

### தனக்குள்தான்

நள்ளுண் டாலும் நலம்அஃது அன்றெனினில்
எள்ளுண் டாலும் இழிபுலை யன்எனத்
தள்ளுண் டாலும் தயாபதி சித்தம்என்று
உள்ளுண் டாயவோர் ஊக்கமொ டேகினான் (1)

**உரை**

யான் (மற்றவர்களால்) நேசிக்கப்பட்டாலும் சரி, நேசிப்பது நன்மையற்ற செயலாயின், மிகவும் இழிவான புலையன் இவன் என்று தூஷிக்கப்பட்டாலும், தூஷித்து ஒதுக்கப்பட்டாலும் சரி, எதுவோ அதுவெல்லாம் கருணை வள்ளலாகிய ஆண்டவன் சித்தமே எனத் தனக்குள்தான் எண்ணிக்கொண்டு, கிறித்தியான் தன் புத்தியிலே உண்டான புத்தெழுச்சியுடன் [சுவிசேடக(ன்) வழியே] விரைந்தான்.

**விளக்கம்**

கிறித்தியான் 'இருவினையொப்பு' நிலை எய்திவிட்டான். இனி, அவனுடைய ஆன்மிக யாத்திரையை எவரும் தடுத்தல் இயலாது. வெளியிலிருந்து திணிக்கப்படும் ஊக்கம் இறுதிவரை நின்றுபிடியாது. உள்ளுக்குள்ளால் எழும் ஊக்கமும் எழுச்சியும் அந்தம் வரை தொடரும்.

நள்ளுண்டல் - விரும்பப்படுதல், நேசிக்கப்படுதல். எள்ளுண்டல் - இகழப்படுதல், தூஷிக்கப்படுதல். தள்ளுண்டல் - தள்ளப்படுதல். நள்(ளல), எள்(ளல்), தள்(ளல்) இம்மூன்றும் முதனிலைத் தொழிற்பெயர். உண்: செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்துவது. தயை + பதி = தயாபதி—தயவுக்கு அதிபதி.

கவிதை நூற்று

குன்று காலும் வெஞ்சாபக் கொழுங்கனல்
முன்றில் நின்று முடுகிச் சுரஞ்செலீஇ
வன்தொ டர்ப்படு மரன்விடு பட்டெனச்
சென்று கூடினன் முன்விடு செந்நெறி (2)

உரை

மலையிலிருந்து வீசும் கொடிய சாபம் என்னும் சுவாலிக்கும் தீ பரவிய மலையடிவார முற்றத்திலிருந்து கிறித்தியான் விரைவாக நடந்து, காட்டுவழியே சென்று, மிகச் சிக்கலான கண்ணியில் அகப்பட்ட மான் விடுபட்டு உயிர் தப்பியதுபோல், தான் முன்னே விட்டு விலகிய செம்மை நெறியாகிய சுவிசேட்க நெறியைச் சென்றடைந்தான்.

விளக்கம்

வேத வழியிற் சென்றவனகிய கிறித்தியான் இடையிலே ஓர் உலக ஞானி (இலௌகீகன்)யைச் சந்தித்தான். 'முத்திக்கு வழி நீ செல்லும் வழியன்று' என கிறித்தியானைத் திசைதிருப்பி விட்டான். கிறித்தியான் வேத நெறியிலிருந்து விலகி வேறுவழி சென்றான். அவ்வழியில் ஒரு பயங்கர மலையடிவாரத்தை அடைந்தான். அம்மலையடிவாரத்திலேயே (முன்றில்) கொடிய சாபம் என்னுங்கனல் சுவாலித்துக் கொண்டிருந்தது. பேரச்சம் கொண்ட கிறித்தியானைச் சபிக்கப்பட்டவர்களுக் கிடமான சுவாலைத் தீயிலிருந்து தடுத்து மீண்டும் வேதவழிக்கு அனுப்பிவைத்தான். ஆபத்பாந்தவனகிய சுவிசேடகன். கண்ணிக்குள் அகப்பட்ட மான் கண்ணியிலிருந்து விடுபட்டதுபோல என்கிறார் கவிஞர்.

கண்ணி இலௌகீகன் காட்டிவைத்த பாதை, மான் கிறித்தியான். எது கண்ணி? இலௌகீகன் காட்டிவைத்த வழி கண்ணி. அந்தவழி எந்தவழி? விண்ணக அரசை விழைந்து வேத நெறியில் வாழ்வை அமைத்துக்கொண்ட அந்த மனிதனுக்கு; இடைநடுவே உலகியல் எண்ணம் தோன்றிவிட்டது. மனைவி, மக்கள், மனை என்ற எண்ணம் தொடங்கிவிட்டது. இவ்வாறு தொடங்கிய உலகபாசமே கண்ணியாக உருவகிக்கப்பட்டது. மோட்சப் பிரயாணத்தை மேற்கொண்ட பரதேசியின் உணர்வில் மீண்டும் உலகியல் ஞானம் தலைகாட்டியது. இந்த உலகியல் ஞானமே 'இலௌகீகன்' எனும் பாத்திரமாக உருவகிக்கப்பட்டது.

கவிஞர் கிருஷ்ணபிள்ளை வேதாந்த சாரமாகிய கைவல்யநவ நீதம் என்னும் தத்துவ நூலில் ஆழ்ந்த பயிற்சி உடையவர் என்பது நன்கு புலனாகின்றது. கவிஞரின் பாடல்களில் கைவல்யநவ நீத கருத்துக்களும் சொற்களும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.

கண்ணியிலகப்பட்ட 'மான்' விடுபட்டு மீண்டும் சற்குருவைச் சந்தித்துப் பழையபடி வேதநெறியிற் புகுந்து கொண்டது. ஆன்மா பந்தபாசங்களிலிருந்து விடுபட்டு, சற்குருவை அடைகின்றது எனக் கைவல்யநவநீதம் கூறுவதையும் கண்டுகொள்க.

"ஆனஇம் மனவி மக்கள்
அர்த்தவீ டணைகள் மூன்றில்
கானவர் வலையில் தப்பி
கைதப்பி ஓடும் மான்போல்
போனவன் வெறுங்கை யோடே
போகாத வண்ணம் சென்று
ஞானசற் குருவைக் கண்டு
நன்றுக வணங்கி னனே" (கைவல் - 6)

குன்று - மலை. செலீஇ - சென்று. **வெஞ்சாபம், கொழுங்** னல்: பண்புத்தொகைகள். முடுகுதல் - விரைந்து செல்லுதல். சுரம் - அருநெறி காடு. **வன்தொடர்:** பண்புத்தொகை. தொடர் - கண்ணி. படுதல் - அகப்படுதல்.

**ஊன்ம னத்திருள் ஓடத் துரந்திடும்**
**ஆன்ம ஞானத்து அவிரொளி நாடிஅக்**
**கான கத்தெவை யுங்கரு தாதுபோய்**
**வானு றுங்கடை வாயிலை நண்ணினான்** (3)

**உரை:**

மாமிசத்தாலாகிய இவ்வுடலிலுள்ள மனத்திருள் நீங்கும் படி, வேத வழியில் அவனைச் செலுத்திக் கொண்டிருக்கும் ஆன்ம ஞானத்திற்குக் காரணமான தெய்வீக ஒளியையே குறிக்கோளாகக் கொண்டு, தான் செல்லும் அக்கானகத்திலே வேறு எவற்றையும் விரும்பாமலே சென்று, விண்ணக இன்பத் திற்குச் செல்வதான திட்டி வாயிலை அடைந்தான்.

**விளக்கம்**

"இருள் ஓட, ஒளி நாடி எவையுங் கருதாது போய் வாயிலை நண்ணினான்" என முடிக்க. (முடித்தல்: கருத்துக்கு இயைபாகச்

சொற்களைச் சேர்த்தல்). ஊன் - மாமிசம், தசை. ஆகுபெயராக உடலை உணர்த்தும் துரந்திடும் - செலுத்திடும். கிறித்தியானை ஆன்ம ஞானத்தில் செலுத்திடும். அவிரொளி: விளங்கிக்கொண்டு நிற்கும் ஒளி, தெய்வீக ஒளி. வான் - முத்தியுலகு.

## 2. திட்டி வாயிலிற்–

### புகுதற்குரியாதாரும் அல்லாதாரும்

இடுக்க வாயிலை திர்ந்தத னுட்புக
அடுக்கு மோவெனக் காசையை வேரறப்
படுக்கு நர்க்கும்ப ருமித்த தூலத்தை
ஒடுக்கு நர்க்கும லாலென வுள்ளினன்: (4)

இடுக்க வாயில் எதிர்ந்து அதனுள்புக
அடுக்குமோ எனக்கு? ஆசையை வேரறப்
படுக்குநர்க்கும் பருமித்த தூலத்தை
ஒடுக்குநர்க்கும் அ(ல்)லால் என உள்ளினன்.

**உரை:**

ஆசையை வேரோடே கல்லியவர்களுக்கும், பருத்த உடலை ஒறுத்தவர்களுக்கும் (இதனுட் புகுதல்) கைகூடுமேயன்றி, ஒடுக்க மான முத்தி வாயிலை அடைந்து அதனுட் புகுதல் எனக்குங் கூடுவதோ என கிறித்தியான் சிந்தித்தான்.

**விளக்கம்**

'படுக்குநர்க்கும் ஒடுக்குநர்க்கும் அல்லால் உட்புகல் எனக்கு அடுக்குமோ என உள்ளினன்'' என இயைத்துப் பொருளறிக. எதிர்ந்து - எதிர்ப்பட்டு, அடைந்து. ஆசையை வேரறப்படுத்தல் உலக இச்சைகளை வேரோடு கல்லி எறிந்துவிடுதல், இச்சைகளுக் கான காரணத்தை இல்லாமற் செய்தல். தூலம் - தூலதேகம். அல் லால்: அலால் என இடைக்குறைந்து நின்றது.

இடுக்க வாயில் - ஒடுக்க (மான) நெறி அங்காலே இங்காலே முட்டாமற் செல்லவேண்டிய மிக ஒடுக்கமான ஒருவழிப் பாதை.

உருக்கு மாரரு ளோங்கிய வேந்தனோர்
திருக்கு மாரணை ச்சிந்தையு ளேதரித்
திருக்கு மாரண ரேயிக லியாவையும்
ஒருக்கு மாற்றல ரொல்லும வர்க்கரோ. (5)

உருக்கும் ஆர்அருள் ஒங்கிய வேந்தன்ஓர்
திருக்குமாரனைச் சிந்தையுளே தரித்து
இருக்கும் ஆரணரே இகல் யாவையும்
ஒருக்கும் ஆற்றலர் ஒல்லும் அவர்க்கு (அரோ)

**உரை:**

(இதயத்தை) இளகச் செய்யும் நிறைந்த கருணையினால் உயர்ந்த வானக வேந்தனுகிய ஒப்பற்ற திருச்சுதனைச் சிந்தை யுள்ளே நிலையாக வைத்திருக்கும் வேத நெறியினரே ஆசா பாசங்கள் அனைத்தையும் சாகடிக்கும் வல்லபம் உள்ளவர் ஆவர். இத்திட்டி வாயிலினுட் புகுதல் அவ்வல்லாளர்க்கே ஒல்லுவ தாகும். என் போன்முருக்கும் இப்பேறு கூறுவதோ?

**விளக்கம்**

"வேந்தன் திருக்குமாரனைச் சிந்தையுள்ளே தரித்திருக்கும் ஆர ணரே யாவையும் இகலி ஒருக்கும் ஆற்றலர்; அவர்க்கே ஒல் லும்" என முடிக்க.

ஓர் - ஒப்பற்ற. **தரித்திருத்தல்** ஒரு சொல். நிலையாக நிறுத்தி வைத்திருத்தல் என்பது பொருள். ஆரணர்: வேதப் பொருளை விளங்கி, வேதவழி ஒழுகுபவர். இகல் - பகைமை. ஒருக் குதல் = அழித்தல். **அவர்க்கு** (அவர்களுக்கே): பிரிநிலை ஏகாரம் யாப்பு நோக்கி மறைந்தது.

திருடர் வஞ்சகர் காமிகள் செல்வமார்
குருடர் மற்றோர் உரிமையைக் கொள்ளைகொள்
முருடர் கோபிகள் மூர்க்கர் குதர்க்கராம்
புருடர்க்கு ஈண்டு புகலரிது ஆகுமால். (6)

**உரை:**

கள்வர், வஞ்சகர், மிதமிஞ்சிய காமிகள் செல்வம் மிகுந்த குருடர் போன்றவர்கள், பிறர் சொத்தை அபகரிக்கும் முர டர், கோபிகள், கொடியவர், விதண்டாவாதிகள் ஆகிய இவர் கள் இத்திட்டி வாயிலிற்குள் ஒருக்காலும் நுழையப்போவ தில்லை.

**விளக்கம்**

"செல்வம் ஆர்குருடர்" மிக நயமாக உள்ளது. பிறர் துன் பத்தைக் காணுதவர்கள், கண்டுல காணுததுபோல இருப்பவர்களே

செல்வர் ஆக முடியும் என்ற குறிப்புப் பொருளோ, 'செல்வமே ஆர் குருடர்' என அருமையாகக் கூறியுள்ளார் கவிஞர். 'பிறர் துன் பங் காணுமல் வாழ்க்கையிற் செல்பவர் செல்வர்.'' குசே லோபாக்கியான இலக்கியப் பயிற்சி "செல்வமார் குருடர்"! என்ற தொடர் அமைப்புக்குக் காரணம் போலும்!

"சிறியரே மதிக்கும் இந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூக ராவர்
பரியணி செவியுளாரும் பயில்தரு செவிடர் ஆவர்
குறிபெறு கண்ணுள் ளாரும் குருடராய் முடிவ ரன்றே"
(குசேலோ)

தன்னெஞ்சறிந்த சத்தியத்திற்கு (உண்மையிற்கு) மாருகப் பேசுகின்றவனும், எதற்கெடுத்தாலும் எதிர்த்துப் பேசுபவனுமாகிய ஒருவன் குதர்க்கன் (விதண்டாவாதி) ஆவன்.

ஆரணர் தவிர்ந்த ஏனையோர் வெறும் புருடர்கள் அன்றி முத்திக்குரிய புருடர்கள் அன்று என்ற குறிப்பிலேதான் "—— குதர்க்கராம் புருடர்" என்கின்றார் போலும். இவர்கள் முத்திவேஷம் போட்டால் "புலுடர்" (புலுடாக்காரர்) என்பதுதான் சரி. புலுடர் என்பது எதுகை நோக்கி புருடர் ஆயிற்று எனவுங் கொள்ளலாம். அரிது இன்மை என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. ஈண்டு - இங்கு. ஆல் - அசை.

இம்மூன்று பாட்டாலும் திட்டிவாயிலுட் புகுதல் 'அகவிகல்' கடந்த ஆரணர்க்கே முடியும் என்பதும் ஏனையோர்க்கு ஆகா என்பதும் கூறப்பட்டுள்ளது.

## (3) திட்டி வாயிலுட் சேரும் விதம்

தட்டுங்கள் திறக்கப்படும்!

என்று சிந்தித் தருகுற ஏழைகாள்
நின்று தட்டுமின் நீங்கிடும் நீள்கதவு
என்று பித்தி எழிலுறத் தீட்டிய
மன்றல் வாசகங் கண்டு மனக்கொளா (7)

உரை:

இவ்வாறெல்லாம் நினைந்து திட்டிவாயிற் பக்கம் செல்ல, ஏழைகளே! இவ்விடத்தில் மனந்தரித்து நின்று, இந்நீள் கத

வைத் தட்டுங்கள்; (அது) திறக்கப்படும் எனச் சுவரில் அழகாக வரைந்துள்ள இனிய வாசகத்தைப் பார்த்து (அதனை) மனத்திருத்தி—

**விளக்கம்**

ஆன்மாவுக்குப் பரிமளம் (மணம்) அளிக்கும் வாசகம் ஆதலின் **'மன்றல் வாசகம்'** எனப்பட்டது. மன்றல் - பரிமளம், மணம். **அது 'தட்டுங்கள் திறக்கப்படும்'** என்பதாகும். இது மறைமொழி. இயேசு பெருமானாரின் மலைப்பொழிவில் (மலைப் பிரசங்கம்) உதிர்ந்த முத்துக்களில் ஒன்று இவ்வாசகம். (மத். 7:7)

பித்தி - சுவர். எழிலுற - அழகுற. மனம் + கொளா = மனக்கொளா—மனங்கொண்டு. கொளா; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இது அடுத்த செய்யுளில் வரும் **'தட்டினான்'** என்னும் வினைமுற்றுடன் முடியும். இதுவும் அடுத்த செய்யுளும் ஒரே வினைமுற்றைக் கொண்டு நிற்கும் அமைப்பினால் **'குளகம்'** எனப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்கள் ஒரே வினைமுற்றினால் முடியும் அமைப்பு நிலைக்குக் குளகம் என்று பெயர்.

*திட்டி வைத்தனர் தேவர் பிரானென*
*உட்டெ ளிந்துணர் வொன்றி யொடுங்கியே*
*கிட்டி யாங்கு கிளர்பொற் கபாடத்தைத்*
*தட்டி னான்நின்று இனையன சாற்றியே* (8)

**உரை**

தேவ தேவனாகிய ஆண்டவன் இத்திட்டி வாயிலை அமைத்தான் என்று உள்ளம் தெளிவடைந்து உணர்வு முற்றாக ஒடுங்கி அதனருகிற் சென்று உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கும் அவ்வழகிய கதவை, இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லித் தட்டினான்.

**விளக்கம்**

'மனக்கொளாத் (முந்திய பாடல்) தட்டினான்' எனவும், தேவர் பிரான் திட்டிவைத்தனர் என இனியன சாற்றித் தட்டினான் எனவும் தனித்தனி இயைக்க.

ஒன்றியொடுங்குதல் - ஒருமித்து ஒடுங்குதல்; முற்றாய் ஒடுங்குதல். திட்டி - திட்டி வாயில்.

'திருஷ்டி' திட்டியாயிற்று ஞானம் என்பது கருத்து. திட்டி வாயில் - ஞான வாயில். ஆங்கு - அவ்விடம், அசை எனக் கொள்ள

வேண்டியதில்லை. கபாடம் - கதவு. இனையன சாற்றி - இப்படிப் பட்ட வார்த்தைகளைச் சொல்லி. உள் + தெளிந்து = உட்டெளிந்து

## (4) கதவு திறக்கும் வண்ணம்

**கிறித்தியான் களிவொடு வேண்டல்**

மாய வுலக மயக்கறுத்து
வரையாக் கிருபை தந்தளித்த
தூய பெருமான் திருவடிக்குத்
தொழும்பன் கபாடந் திறமினே (9)

**உரை**

பொய்யான இந்த உலகின் தொடர்பைத் துண்டித்துத் தம்முடைய எல்லையற்ற கருணையை ஈந்து என்னைக் காத்தருளிய பரிசுத்தமான ஆண்டவன் திருப்பாதங்களுக்கு யான் அடிமை. (எனவே) கதவைத் திறப்பீராக.

**விளக்கம்**

மாயம் - பொய், மயக்கம்: மயக்கம் காரணமாக ஏற்பட்ட ஆசாபாசத் தொடர்புகள். வரையாக் கிருபை: (வரையாத கிருபை) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தொழும்பு - அடிமை. மின்: முன்னிலைப் பன்மை விகுதி, ஓ: அசை.

ஆசா பாசக் கொடுஞ்சுழலில்
அகப்பட் டுலைந்தேன் அருளணுக
நாச தேசந் துறந்துவந்தேன்
நாயேன் கபாடந் திறமினே (10)

**உரை**

ஆசை, பாசம் என்னும் சுழற்சியில் அகப்பட்டு (இத்தனை நாளும்) உலைந்துவிட்டேன். (இப்பொழுது) திருவருள் என்னை அணுகியதால் அழிவுக்கிடமான இவ்வுலகத்தைத் துறந்து வந்தேன் நாயேன். (ஆதலின்) கதவைத் திறந்திடுக.

**விளக்கம்**

நாச தேசம் உடல் எனக்கொண்டு உடலின் தேவைகளைத் துறந்துவந்தேன் என்று கூறலும் ஆகும். ஆசா பாசம் = ஆசை யாகிய வலை என்றும் கூறலாம். பாசம் - வலை.

உள்ளந் திரும்பிக் குணப்படுமின்
உய்வீர் என்ன உவந்துரைத்த
வள்ளல் திருவாக் கதுகேட்டு
வந்தேன் கபாடந் திறமிலே (11)

உரை

'நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்; அப்பொழுது பிழைப்பீர்கள்' என்று மனமுவந்து கூறிய வள்ளலாகிய இயேசு நாதரின் தெய்விக வாசகத்தைக் கேட்டு இங்கு வந்தேன். கதவைத் திறந்திடுவீர்.

விளக்கம்

உய்வீர் - கடைத்தேறுவீர். வள்ளல் . கருணை வள்ளலாகிய இயேசுநாதர். திருவாக்கு - தெய்விக வாசகம்:

கல்லேன் சுருதி நலம்புரியக்
கருதேன் பாவந் கசந்திடேன்
பொல்லேன் எனினும் வந்தடைந்தேன்
போகேன் கபாடந் திறமிலே (12)

உரை

யான் சுருதி (வேதம்) கற்கவில்லை; (யார்க்கும்) நன்மை புரியக் கருதவில்லை; பாவஞ் செய்தலில் எனக்குக் கசப்பு ஏற் படவில்லை; (மொத்தத்தில்) யான் பொல்லாதவனே. என்ற லும் இங்கு வந்தடைந்து விட்டேன். (இனி யான்) திரும்பிப் போகமாட்டேன். (ஆதலின் ஐயன்மீர்) கதவுகளைத் திறந்தருளு வீராக.

ஆருக் கொடிய பசிதாகம்
அடங்கத் தணிய அருளளிக்கும்
மாருக் கருணை வரதன்பால்
வந்தேன் கபாடந் திறமிலே (13)

உரை

(ஒருகாலும்) அற்றுப்போகாத பசியும் தாகமும் முற்றுகத் தணியும்படி திருவருள் தந்து காக்கும் மாறுபடாத கருணையை வரமாகப் பொழியும் இறைவனே வந்தடைந்து விட்டேன். கத வைத் திறப்பீர்.

**விளக்கம்**

ஆரு(த) - குறையாத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மாருக் கருணை என்பதுப் இது. **பரிதாகம்**: உற்மைத்தொகை. அடங்க - முழுவதும்.

வேறு

"தான தந்ததன தான தந்ததன
தான தந்ததன தனதான"

பாவம் மீறிவளர் காடு துற்றியலை
பட்ட ழுங்கி யயர்பாவியான்
ஜீவ மாநதியின் நீர ருந்தவதி
தேட்டம் உண்டு கடைதிறமிலே (14)

**உரை**

நான் (அறக் கோட்பாடுகளை யெல்லாம்) மீறிப் பாவங் கள் வளரும் காட்டில் (பாவத்தோடு பாவமாக) நெருங்கி அலையுண்டு வருந்திச் சோர்வெய்திய பாவியாவேன். (இப் பொழுதோ) எனக்குச் ஜீவன் அளிக்கும் அருட் கங்கையின் தண்ணீரை அருந்துவதற்கு அதிகம் ஆசையுண்டு. (அதனல் இங்கு வந்துள்ளேன்) அருட் கதவினைத் திறந்திடுவீர்.

**விளக்கம்**

துற்றி - நெருங்கி. அழுந்துதல் - வருந்துதல். அயர்தல் - சோர் வுறுதல். அதிதேட்டம் - பேராவல்.

நீதி யாதிபர்சி னந்த ஹிக்குநெறி
நின்று தப்பியிந் நெறிப்படஇ
மாத யாபரன டித்தொ ழும்புசெய
வந்த பாவி கடைதிறமிலே (15)

[நீதி ஆதிபர் சினம் தஹிக்கும்நெறி
நின்று தப்பி இந்நெறிப் படஇ
மா தயாபரன் அடித்தொழும்பு செய
வந்தபாவி கடைதிறமிலே]

**உரை**

நீதிபதியாகிய ஆண்டவனது சினத்தி ல்ரியும் பாதையினி ன்றும் தப்பிப் பிழைத்து இந்த வழியை (சுவிசேடக வழி)

அடைந்து, மிகப் பெரும் தயாளனுகிய ஆண்டவனது திருப் பாதங்களுக்குச் சேவைசெய்ய வந்த பாவியேன் யான். (தயை புரிந்து) கதவைத் திறந்திடுக.

**விளக்கம்**

அதிபர் ஆதிபர் என முதல் நீண்டது. தஹிப்பு - தகனித்தல், சுட்டுப் பொசுக்கல். படீஇ - படர்ந்து, சேர்ந்து, வந்த என்பத னுடன் முடிந்த செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

சேரு மாகொடிய தீவி னைத்திரள்
சுமந்தி ளைத்தளி கொள்ஜீவநற்
ருரு நீழலிலொ துங்கி யுய்யவரு
தமியன் யான்க தவுதிறமினே (16)

[சேரும் மாகொடிய தீவினைத்திரள்
சுமந்து இளைத்து அளிகொள் ஜீவநல்
தாரு நீழலில் ஒதுங்கி உய்யவரு
தமியன் யான் கதவு திறமினே]

**உரை**

(ஒன்றுக்குப் பின் ஒன்றுக வந்து) சேரும் மாகொடிய பாவக்கூட்டங்கள் ஆகிய சுமையினைச் சுமந்து சோர்வடைந்த காரணத்தால், குளுமை மிகுந்த ஜீவ விருட்சம் ஆகிய நன் மரத்தின் நிழலில் தங்கி விண்ணக வாழ்வடைய வருகின்ற பாவி யான். கதவைத் திறந்திடுவிர். (கருணையினிர்);

**விளக்கம்**

ஜீவநல்தாரு - ஆன்மாவுக்கு உயிரளிக்கும் நன்மரம். தரு யாப்பு நோக்கி, தாரு ஆனது. நீழல் - நிழல். நிழல் என்பதும் யாப்பு நோக்கி நீழல் ஆயது. நீட்டல் விகாரம்) தமியன் - தனித் தவன், ஆதரவற்றவன். "ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும், கங்கைவாழ் சடைக்கரந்தார் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுள்." என்னும் வாகீசர் வாச கம் இங்கு நினைவாகின்றது அல்லவா!

கொடிய ரிற்கொடிய புலைய ரிற்புலைய
னுயி னுங்கு மரநாயகன்
அடிய ருக்கடிய னுக வந்திவண
டைந்த னன்கதவு திறமினே (17)

[கொடியரில் கொடிய புலையரிற் புலையன்
ஆயினும் குமர நாயகன்
அடியருக்கு அடியன்ஆக வந்துஇவண்
அடைந்தனன் கதவு திறமினே]

**உரை**

அறக் கொடியவனும் பச்சைப் புலையனும் ஆனாலும் குமரக் கடவுளின் அடியாருக்கு அடியானாக இங்கு வந்தடைந்துள்ளேன். கதவைத் திறப்பீராக.

**விளக்கம்**

கொடியரிற் கொடியன் - அறக்கொடியவன். புலையரிற் புலையன் - பச்சைப் புலையன்.

நிருப னீதியினி லத்தி ழிந்துபலி
நேர்ந்தி ரட்சையரு ணேமியாஞ்
சருவ லோகசர ணியனே நம்பிவரு
தமியன் யான்கதவு திறமினே (18)

[நிருபன்! நீதியின் நிலத்து இழிந்துபலி
நேர்ந்து இரட்சை அருள் நேமியாம்
சருவலோக சரணியனே நம்பிவரு
தமியன் யான் கதவுதிறமினே]

**உரை**

அனைத்துலகங்களுக்கும் அரசன்! அவன் தேவ நீதி காரணமாக (விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்கு) இறங்கித் தன்னைத் தானே சிலுவையிற் பலிகொடுத்து, (மனுக்குலத்திற்கு) இரட்சிப்பை அருளியவன். எல்லா உலகங்களுக்கும் அடைக்கலப் பொருளாய் அமைந்தவன். அவனை நம்பி வந்த அடியவன் யான். கதவைத் திறப்பீர்!

**விளக்கம்**

நிருபன் - (பிரபஞ்ச) மன்னன். இழிதல் - இறங்குதல், அவதரித்தல். நேமி - உலகம், சருவலோகசரணியன் - சர்வ உலகங்களுக்கும் சரண் (அடைக்கலம்) ஆயவன். வந்தமியன் - வினைத் தொகை.

## (5) வாயிலோன் கதவம் திறத்தல்

இன்னவித மாகவுரை யாடி யெழி லாரும்
வன்னமணி வாயில்செறி மாண்கதவு தட்டி
உன்னிநனி யோலமிட வுள்ளுருகி யுள்ளா
மன்னுகடை காவலன்ம ருங்குறவ ணைந்தே (19)

**உரை**

இவ்வண்ணமாகச் சொல்லி, அழகு நிறைந்த பல நிற மணிகள் பதித்த திட்டிவாயிலை மூடிய பெருங் கதவைத் தட்டி, ஆண்டவனை நினைத்துப் பெரிதும் சத்தமிட, உள்ளேயிருந்த வாயிற் காவலன் மனமிளகி, கதவின் பக்கமாக நெருங்கிவந்து –

**விளக்கம்**

ஆர்தல் - நிறைதல். வன்னம் - வண்ணம், நிறம். மாண்கதவு- மகிமைக்குரிய கதவு எனவுங் கொள்ளலாம். மாண்பு - மகிமை. **உள்ளா(க) மன்னுகடை காவலன்** - கதவின் உட்புறத்திருந்த வாயிற் காவலோன். மன்னுதல் - நிலையாக இருத்தல். இவனை, பட்சபாதன் (Good - will) எனக் கூறுவர் மோட்சப் பிரயாண ஆசிரியர். **பட்சபாதன் என்பது தேவன் இயேசுநாதர் மூலமாகப் பாவிகள் மேல் வைத்த அன்பைக் குறிக்கும் என்றும் அவர் கூறுவர்.**

உற அணைதல் - நெருங்கிச் சேர்தல், நட்பாகக் கிட்ட வருதல்

எஞ்சலிலு ணர்ச்சிபரி தாபமித யத்தில்
விஞ்சவுள மற்றதிவன் வாய்மொழிவி ளக்கும்
வஞ்சமில னுமெனம னக்கொளம தித்து
அஞ்சலென வொல்லையின ருட்கடைதி றந்தான்
(20)

[எஞ்சலில் உணர்ச்சி பரிதாபம் இதயத்தில்
விஞ்சஉள. மற்றுஅது இவன்வாய்மொழி விளக்கும்
வஞ்சம் இலனும்என மனக்கொளம தித்து
'அஞ்சல்' என வல்லையின் அருட்கடை திறந்தான்]

**உரை**

குறைவற்ற (தெய்வ) உணர்ச்சியும், இரக்கமும் இவன் இதயத்தில் மிகுதியாக உள்ளன. இதனை இவன் வாய்ச் சொற்

களே விளக்குகின்றன. (இவன்) கரவற்றவனுவன் என நன்கு மனதில் எண்ணிக்கொண்டு, 'பயப்படாதே' என்று சொல்லி இறைவனது அருளாகிய கதவைத் திறந்துவிட்டான்.

**விளக்கம்**

கிறித்தியான் பேசிய முறையிலும் பேச்சிலும் கடைகாவலோன் நம்பிக்கை வைத்து, இவன் ஏமாற்றுக்காரன் அல்லன் என்பதை மனஉணர்வு பூர்வமாக ஏற்றுக்கொண்டு கதவைத் திறந்துவிட்டான் கடைகாவலன்.

கிறித்தியான் **கதவைத் தட்டுதல்** இயேசுவின் மூலமாய்ப் பாவமன்னிப்பைப் பெறவேண்டும் என்று இடைவிடாது செபம் செய்வதையும், கடைகாவலோன் **கதவைத் திறத்தல்** சரியான வழியாக இயேசுவினிடத்தில் வருகிற ஒவ்வொருவனும் ஏற்றுக் கொள்ளப்படுவான் என்பதையும் குறிக்கும்.

எஞ்சல் - குறைவு. விஞ்ச - அதிகமாக. **மற்று** : அசைநிலை. **அஞ்சல்** : வியங்கோள் வினைமுற்று. ஒல்லை - விரைவு.

இதுவும், இதற்கு முதற் பாடலும் குளகம். அணைந்து திறந்தான் என இரு பாடலும் ஒன்றுக இணையும்.

வாயில்திற வுண்டிடம லர்ந்தவன சம்போல்
நேயன்வத னந்திகழ நேயமொடு நோக்கி
ஆயெனவெ திர்ந்தனெய னையவிவண் வெய்ய
தீயன்வர வொல்வதுகொல் யாதுனது சித்தம்(21)

[வாயில் திறவுண்டிட மலர்ந்த வனசம்போல்
நேயன் வதனம்திகழ நேயமொடு நோக்கி
ஆய்என எதிர்ந்தனை என்ஐய! இவண்வெய்ய
தீயன்வரவு ஒல்வதுகொல்? யாதுஉனது சித்தம்?]

**உரை**

வாசல் திறக்கப்பட மலர்ந்த தாமரைபோல் கிறித்தியான் முகம் ஒளிபெருக, கிறித்தியான் நேசத்தோடு அக்கடை காவலனை நோக்கி, 'என் ஐயனே! (பால் நினைந்தூட்டும்) தாயைப் போல் என் எதிரே வந்தாய். இவ்விடத்தில் மிகத் தீயவனுகிய யான் வருதல் கூடுமோ? உன் திருவுளக் கருத்து எதுவோ? எனக் கேட்டான்.

விளக்கம்

திறவுண்டிட - திறக்கப்பட, வனசம் - தாமரை; பொருளாகு பெயர். வதனம் - முகம். எதிர்ந்தனை : (எதிரே வந்தாய்) முன்னிலை ஒருமை வினைமுற்று. ஒல்வதுகொல் - முடிவதோ, கூடுவதோ. கொல் : வினாவிடைச் சொல்.

## (6) வாயிலோன் பதில்

என்றுவின வக்கடுகி யீண்டுவரு கென்ன
முன்றிலி னகத்துறவி ழுத்துமுறை யாகப்
பொன்றிணிக டைத்தலைய டைத்துநனி பூட்டிப்
பின்றையிது கேளெனவி யப்பினெடு பேசும் (22)

[என்றுவினவ, கடுகி ஈண்டுவருக என்ன
முன்றிலில் அகத்துற இழுத்து முறையாகப்
பொன்திணி கடைத்தலை அடைத்து நனிபூட்டிப்
பின்றை இதுகேள்என வியப்பினெடு பேசும்]

உரை

என்று இவ்வாறு கிறித்தியான் வினவ, கடை காவலன் 'விரைவாக இங்கே வருக' என்று சொல்லி, கதவின் முற் புறத்திலிருந்து உட்பக்கத்தில் சேரும்படியாகக் (கிறித்தியானைக் கையாற் பிடித்து) இழுத்து, முன்போல் திட்டி வாயிலின் கதவை அடைந்து நன்கு பூட்டிய பின்பு, 'யான் கூறுபவற் றைக் கேள்' என வியப்புணர்ச்சியினெடு பேசுவான்.

விளக்கம்

கதவின் வெளியில் நின்ற கிறித்தியானின் கையைப் பிடித்துப் படாரென உள்ளுக்கு இழுத்தான் கடை காவலன். உள்ளுக்கு இழுத்தெடுத்து விட்டு ஆச்சரியத்தினெடு பேசுகிறான்.

கடுகி - விரைவாக. முன்றில் - முற்றம். இங்கு, கதவின் முற் புறம். அகம் - உட்புறம். கடைத்தலை - திட்டி வாயில்.

நெருக்குறும் இவ்வாயில்புக நேடி வருவோரை
வெருக்கொள வெருட்டிவிசி கம்பல விடுத்தே
முருக்கும் அலகைக்கிறைவன் மொய்ம்பினெடு
[தங்கும்
துருக்கம் இதனுக்கருகு தோன்றுவது காண்டி (23)

**உரை**

ஒடுக்கமான இத்திட்டி வாயிலுட் புக விரும்பி வருகின்ற வரை நடுங்கும்படியாகப் பயமுறுத்தி, தன் அம்பு (விசிகம்) பலவற்றையும் பிரயோகம் செய்து, (வருகின்றவர்களின் விண்ணக வாழ்வு விழைவை) அழித்துவிடும் பேய்களுக்குத் தலைவனாகிய சாத்தான் தன் முழுப் பலத்தோடு தள்ளுகின்ற கோட்டை இதற்குப் பக்கத்திற் காணப்படுவதைப் பார்ப்பாயாக.

**விளக்கம்**

நற்சிந்தனைகளுக்கிடையில் தீயெண்ணம் ஊடுருவுவதற்கு அதிக நேரம் பிடிக்காது. கணப்பொழுதிலேயே இருந்தாற்போல் தோன்றி விடும். தீயெண்ணங்கள் எழுவது சாத்தானின் தூண்டுதல் ஆகும். தீயெண்ணம் எழவிடாமல் பார்த்துக்கொள்வது அவசியமாதலின், கிறித்தியானைப் படாரென உள்ளுக்கிழுத்தான் கடைகாவலன் எனக் கூறப்பட்டது.

இந்தத் திட்டி வாயிலெனும் கோட்டைக்குச் சற்று அப்பால் வேறொரு பலத்த கோட்டை உண்டு. அதற்குப் 'பெயல்செபூல்' (Beelzebul) என்னும் பெயருடைய ஒருவன் அதிபதியாய் இருக்கிறான் எனவும் அவனும் அவனுடைய கையாட்களும் இவ்வாசலைத் தேடிவரும் மோட்சப் பயணிகள் உட்பிரவேசிப்பதற் குள்ளாகக் கொன்றுவிட்டால் நல்லதென்று எண்ணி அம்புகளைப் பிரயோகிப்பார்கள் எனவும், ஆனதினாலேதான் அவ்வளவு ஆத்திரத்தோடு கடைகாவலன் கிறித்தியானை உள்ளிற்கு இழுத்துக்கொண்டான் எனவும் மூல நூலாசிரியர் கூறுவர்.

பெயல்செபூலின் அம்புகள் என்பது, சாத்தான் பொல்லாத நினைவுகளை மனிதருடைய உள்ளத்தில் எழுப்பிவிட்டு, அவர்களைக் கிறிஸ்துவினிடம் வரவிடாமல் அதைரியப்படுத்தித் தடுப்பதைக் குறிக்கும் எனவும் மூல நூலாகிய மோட்சப் பிரயாண ஆசிரியர் கூறுவர்.

நேடி - விரும்பி. விசிகம் - அம்பு. அலகை - பேய். மொய்ம்பு - வலிமை. துருக்கம் - கோட்டை. காண்டி - காண்பாய். முன்னிலையொருமை வினைமுற்று.

இங்கபயம் இட்டகுரல் யாதென எதிர்ந்தே
அங்கவன் வெகுண்டுனை அடர்த்துயிர் அழித்து
நுங்குவன் எனக்கருதி நொய்தினில் இழுத்தேன்
சங்கையற உன்னிலை தனைப்புகறி என்றான் (24)

உரை

இங்கே, அடைக்கலம் என்று சொல்லிய ஓலம் யாருடைய தென அறிந்து, அந்தக் கோட்டையிலுள்ள சாத்தான் சினந்து உன்னைத் துன்புறுத்தி உயிரை அழித்து உன்னைக் கொன்று விடுவான் என்று கருதி, யான் உன்னை அவசரமாக உள்ளே இழுத்தேன். (இனி உனக்கு ஏதும் தீமை நிகழுமோ என்ற) அற்ப சந்தேகமும் இன்றி உன்பாடு சிறப்புக்களைக் கூறுவாயாக என்று கேட்டான் கடைகாவலன்.

விளக்கம்

அடர்த்தல் - நெருக்கி வருத்தல். நுங்குதல் - விழுங்குதல். நொய்தினில் - விரைவாக. உன்னிலை - உன் வரலாறு, பாடு - பிறப்புக்கள். சங்கை - சந்தேகம். புகறி - (புகல்தி) = சொல்லுவாய் முன்னிலை யொருமை வினைமுற்று.

(கவிக்கூற்று)

நேசனுரை கேட்டுளம் நடுங்கியிவண் நேர்ந்த
மோசம் அகலத்துணை புரிந்தசெயல் முன்னிப்
பேசரிய பேரருள் பிறங்கு பிணியாய
ஈசனை வழுத்தி இதுஇயம்புவன் விகாரி (25)

உரை

நண்பனை வாயிற் காவலோன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, மனம் நடுங்கி, இவ்விடத்தில் உண்டான மோசடி நீங்கும்படி உதவிபுரிந்த அக்கடைகாவலன் செயலை நன்றிப் பெருக்குடன் நினைந்து, வார்த்தைகளால் அளவிடற்கரிய பெருங் கருணையை விளக்கமுறும் திருவுடலாகக் கொண்ட பெருமானை வணங்கித் தன் வரலாற்றினைச் சொல்லத் தொடங்குவான் ஆத்தும விகாரி.

விளக்கம்

இறைவன் பெருங் கருணையையே உருவாகக் கொண்டவன். அவன் கருணை வார்த்தைகளுக்கப்பாற்பட்டது. பிணி - கட்டு : முதனிலைத் தொழிற்பெயர். உடலைக் குறிக்கின்றது. பிறங்குதல் - விளங்குதல்.

உலக போகங்களில் விகாரம் கொள்ளாமல் தன் ஆத்துமாவைப் பற்றிய விகாரம் உடையவன் ஆதலின், சிறிதியான், ஆத்துமவிகாரி எனப்பட்டான். விகாரத்தை உடையவன் விகாரி விகாரம் + இ) விகாரம் = சிந்தனைக் கவலை.

## (7) நன்றிப்பெருக்குடன் ஆத்துமவிகாரி தன் சரித்திரம் உரைத்தல்

வெய்யவல கைக்கெனை விலக்கி உயிர்வீயா(து)
உய்யவிவண் உய்த்த உதவிக்குதவி உண்டோ
ஐயஉத வாதொருவர் ஆற்றும் உதவிக்கு
வையகமும் வானகமும் ஆற்றலரி தாமால் (26)

**உரை**

ஐயனே! கொடிய சாத்தானிலிருந்து என்னை விலக்கிக் காத்து, என்னுயிர் அழிந்துபோகாது உய்யும்படியாக என்னை இந்த இடத்திற்குக் கொண்டு சேர்த்த உதவிக்குக் கைமாறுகச் செய்யத்தக்க வேறு உதவி உண்டோ? இல்லை. நாம் எவருக்கும் உதவி செய்யாதிருக்கையில் பிறர் நமக்குச் செய்த உதவிக்குக் கைமாறுக, மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையுமே கொடுத்தாலும் அவை அவ் உதவிக்கு ஒப்பாவதில்லை.

**விளக்கம்**

**ஆல்** : அசைநிலை. வெய்ய அலகை - கொடிய பேய் சாத்தான். வீய்தல் - அழிதல். உய்த்தல் - செலுத்தல். ஆற்றல் ஒப்பாதல்.

திடீரென உள்ளுக்கிழுத்து 'அபாயப் பிரதேச'த்திலிருந்து காப்பாற்றிய உதவிக்கு மண்ணும் விண்ணும் கொடுத்தாலுமே அவை கைமாறுகக் கருத முடியாது என்பது கருத்து.

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

இக்குறள் கிறித்தியானின் கருத்தை முழுமைப்படுத்தியுள்ளது.

ஆதலின் அருங்குரவ! நிற்குதவு கைம்மாறு
ஏதுமிலை, நிற்கிரியை யாவும் அறிதக்க
மாதகைய வேந்தன் அருள்மல்கிடும்உனக்கென்(று)
ஓதி அளியேனிலை உரைப்பல் இனியென்னை —(27)

**உரை**

ஆனதினால் அருங்குரவனே! உனக்கு யான் செய்யக்கூடும் கைம்மாறேதுமில்லை. நி செய்த நற்செயல்கள் எல்லாவற்றையும் அறியத்தக்க மிகுதியும் தகுதியாளனுகிய இறைவன் உனக்

குத் தன் அருளைத் தருவான் என்று சொல்லிவிட்டு, இனி அடிமையாகிய என் சரித்திரத்தை யான் சொல்லுவேன் என்று (தொடங்கி) —

**விளக்கம்**

குரவன் - நன்னெறி காட்டுவோன். கிரியை - செயல். அறிதக்க. அறியத்தக்க; அறியக்கூடிய, மாதகைய வேந்தன் - பெருந்தகுதி பொருந்திய இறைவன். என்ன - என்று : செய்யா என்னும் வாய் பாட்டு வினையெச்சம்.

விளம்பரம் அடுத்ததும் வெருண்டு மனமக்கட்கு
உளம்பட உரைத்ததும் ஓரீஇ மதிமயங்கித்
தளம்பியதும் ஆங்குசுவி சேடனுரை தந்து
வளம்பெற விடுத்ததும் இவ்வாயில் உறுகென்று
(28)

**உரை**

கிறித்துவாகிய வேந்தன் விடுத்த வேதமென்னும் விளம்பரத்தை வாசித்ததும், (வாசிப்பின் வினைவாகத் தன் முதுகின் மேற் பாவச்சுமை தன்னை அழுத்துவதாக உணர்ந்து) பயந்து அப்பயத்தினை மனவி மக்கட்குத் தெளிவாக இடித்துக் கூறியதும், (அவர்கள் அதனைப் பொருட்படுத்தாததனால்) அவர்களை விலகி இனி என்செய்வதென்று புத்தி தடுமாறி மனந் தளம்பியதும், அவ்விடத்திலே சுவிசேடகன் என்பான் வந்து எனக்கு நல்லுரை கூறி, ஆன்மிக வளம்பெறுவதற்கு இத்திட்டி வாயில் வழியாகச் செல்க என்று திசை திருப்பியதும்.

**விளக்கம்**

'அடுத்ததும் உரைத்ததும் வாயில் உறுகென்று விடுத்ததும்' என்று இயைக்க. விளம்பரம், நற்செய்தி என்னும் விளம்பரம். ஓரீஇ - நீங்கி, சுவிசேஷகன் - சுவிசேஷத்தை உபதேசிப்பவன், உண்மையான தேவ ஊழியக்காரன். இவ்வாயில் - இத்திட்டிவாயில்.

பெருஞ்சுமை யொடேவழி பிடித்ததும் மென்
[னெஞ்சன்
விரும்பியுடன் வந்துநொதி வீழ்ந்துளம் வெரீ
[இப்பின்
திரும்பியதும் அன்றுதவி செய்துகரை யேற்றி
உரம்பயில் சகாயன் விவரித்ததும் உணர்ந்தே —
(29)

**உரை**

பெரும் பாவச்சுமையோடு யான் முத்திவழியைப் பிடித்துக் கொண்டதும், மென்னெஞ்சன் என்பவன் விருப்பத்தோடு என்னுடன் வந்து, வழியிலே சேற்றில் விழுந்து மனம் பயந்து (பின்னிட்டு) வீடு திரும்பியதும், அப்பொழுது உளவலிமைமிக்க சகாயன் என்பவன் வந்து தனித்த நிலையில் எனக்கு உதவி புரிந்து, என்னை அச்சேற்றினின்றும் எடுத்துக் கரையேற்றி, நான் செல்லும் பாதையை விவரித்துக் கூறியதையும் உணர்ந்து-

**விளக்கம்**

பெருஞ்சுமை - பெரிய பாவமாகிய சுமை, வெரீஇ - வெருவி, பயந்து.

மென்னெஞ்சன் : இணங்ந நெஞ்சன் எனக் கூறுவர் மூல நூலாசிரியர். மேலும், மற்றவர்களுடைய போதனைக்கு இலேசாய் மனதைச் சாய்க்கிறவனைக் குறிக்தும் என்பர். அவனை இரட்சணிய விசாரணையின் வழிக்குக் கொண்டுவருவது இலேசாய் இருந்தாலும், மெய்யான கிருபை அவன் இருதயத்தில் இல்லை. எந்த விதமான துன்பமும் இரட்சணிய விசாரணையை விட்டு அவனை விலக்கிப்போடலாம்.

சகாயன் என்பது, ஆத்தும ஆபத்துக்களினால் வருந்துகிறவர்களை ஆறுதல்படுத்துகிற இயேசுகிறிஸ்துவை அல்லது அவர் பிரயோகிக்கும் பல ஏதுக்களைக் குறிக்கும்.

நொதி (உளை, சேறு) : நம்பிக்கையிழவு என்னும் சேறு என்க. நம்பிக்கையிழவு என்பது, புதிதாய் மனந் திரும்புகிறவர்களுக்கு உண்டாகும் பலவித பயங்கரங்களைக் குறிக்கிறது அவர்கள் தங்கள் சே நிலைமையைத் திட்டமாய் அறிந்து, நமக்கேது நம்பிக்கை இருக்கிறது? என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள், அவர்கள் எவ்வளவுக்கு முயற்சி செய்கிறார்களோ அவ்வளவுக்கு நம்பிக்கையில்லாதவர்கள் ஆகிறார்கள்.

உவப்பொடு வரும்பொழுது லோக விவகாரி
அவப்பயன் எனக்குறுகி ஆரணியம் உய்க்க
நிவப்புறு கிரித்தலை நெருங்கியது. நோர்ந்து
தவப்பயன் எனக்கருதி தந்தமுனி வந்தே= (30)

**உரை**

இவ்வண்ணம் சகாயன் என்னைக் காப்பாற்றியதால் சுவி சேடக(ன்) நெறியே யான் மனவிருப்போடு வரும்பொழுது, உலோக விவகாரி என்பவன் குறுக்காக வந்து நின்று, இதனைற் பயனென்றும் இல்லை என்று கூறி என்னை ஒரு காட்டு வழியா கச் செலுத்த, அந்த வழியிலே நிமிர்ந்து நின்ற ஒரு மலைப் பக்கத்தை அடைந்ததும், அங்கு என் தவப்பயனே என்று சொல் லும்படி முன் சந்தித்த சுவிசேடகன் என்னெதிரே வந்துநின்று.

**விளக்கம்**

**உலோக விவகாரி:** இவன் **'இலௌகீகன்'** எனவும் சொல் லப்படுவான், **லோகஞானி** எனக் கூறுவர் மூலநூலார். தேவனுக் கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்யும்படி பிரயாசப்படுகிற வர்களைக் குறிக்கிறது. அவர்கள் உலக விஷயங்களில் விவேக முடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் கூடியமட்டிலும் சன் மார்க்கராய் நடந்து, தேவபக்திக்கடுத்த சில கடமைகளை அநு சரித்து வரலாம்; ஆனால் தங்களுடைய லோக வாழ்வைத் தடுக்கும் விஷயங்கள் எவைகளோ அல்லது அவர்கள் மனதை அதிலிருந்து பிரியப்பண்ணும் எத்தனங்கள் எவைகளோ அவைகளுக்கு அவர்கள் நேர்விரோதம் பண்ணுவார்கள்.

சுருதி - வேதம். சுருதிதந்தமுனி சுவிசேடன்.

*மீண்டுவழி பற்றென வெகுண்டு மதிசொல்லித்*
*தூண்டியினி மற்றவை துலங்க ஒளிதுன்னுங்*
*காண்டகு கடைத்தலை கழித்தறிதி என்ன*
*ஈண்டியதும் இவ்வென எடுத்தினி தியம்பி–(31)*

**உரை**

சுவிசேடகன் என்னைக் கோபித்து, 'நீ இவ்விடத்தை விட் டுத் திரும்பி, முன்கூறிய முத்திநெறியைக் கண்டு அந்நெறிச் செல்வாய்' என எனக்குப் புத்திமதி கூறித் தூண்டுதல் அளித்து இனிமேல் ஒளி செறியும் மெய்க்காட்சிக்குத் தகுதியான தான திட்டிவாயிலைக் கடந்து சென்று மேலே செய்ய வேண்டியவற்றை விளக்கமாக அறிவாயாக என்று சொல்ல யான் இவ்விடம் வந்தேன். யான் இவ்விடம் வந்த அனுபவங்கள் இவையெனத் தெளிவாக எடுத்துச் சொல்லி –

**விளக்கம்**

'கடைத்தலை (திட்டிவாயில்) கழித்து, மற்றவை துலங்க அறிதி' எனக் கூட்டுக. **மற்றவை துலங்க** : திட்டிவாயில் வரை நெறிப் படுத்திய சுவிசேடகன், அங்கு அடைந்ததும் மேற்கொள்ள வேண் டிய விண்ணக யாத்திரை பற்றிய எண்ணங்கள் தெளிவடையும் படியாக அங்கே அறிந்துகொள் என்கிருன். **இவ்** : இவை. அனு பவங்கள் இவை. காண் + தகு = காண்டகு. ஈண்டியதும் - இங்கு வந்ததும்.

*பின்னிடும் மென்னெஞ்சன் நிலைபேசுவ தெவன் [கொல்*
*மன்னுசுவி சேடகன் மறுத்தெதிர் வரானேல்*
*என்னிலை விரைந்துகெடும் எங்குரவ எல்லாம்*
*உன்னத அருட்டுணையில் உற்றநலம் என்ருன் (32)*

**உரை**

*என் குரவனே! என்னுடன் வந்து பின்னடித்துக் கொண்ட மென்னெஞ்சனுடைய போக்கினை எப்படி யான் சொல்லுவதோ? நிலைபேறுடைய சுவிசேடகன் மீண்டும் என் எதிரே வரா திருப்பனேல் என்னிலை என்னுகும்? விரைந்து கெட்டுப்போயிருப் பேன்! இவையெல்லாம் உன்னதமான இறைவனது திருவருள் உதவியினுல் உண்டாகிய நன்மையே என்று கிறித்தியான் தன் கதை கூறி முடித்தான்.*

**விளக்கம்**

இவ் ஆறு பாடலும் **குளகம்.** என்ஞ (27), அடுத்ததும் உரைத்ததும், தளர்பியதும், விடுத்ததும் (28), பிடித்ததும், திரும் பியதும் (29), நெருங்கியதும் (30), ஈண்டியதும், இவ் என எடுத் தினிது இயம்பி (31), எல்லாம் அருட்டுணையில் உற்றநலம் என் ருன் (32) என இயைத்துக் கருத்தினைக் கோத்துக்கொள்க.

## (8) கடைகாவலோன் அறவுரை

*ஆத்தும விகாரிவர லாறினிது கேட்டே*
*மாத்தகைய வேந்தனை வழுத்தியுண் மகிழ்ச்சி*
*பூத்தினைய சொன்மதி புகட்டிடுவ தானுன்*
*காத்துவழி காட்டுகடை காவலன் அவற்கே (33)*

**உரை**

தன்பால் வருகின்றவர்களைக் காப்பாற்றி நன்னெறி காட்டு பவனுகிய கடைகாவலன் ஆத்தும விகாரியாகிய அக் கிறித்தியா னின் சரித்திரத்தை இனிது கேட்டு, எல்லாம் வல்லவனுகிய இறைவனை வணங்கி, உள்ளத்துள்ளே உவகை பூத்து, அக் கிறித்தியானுக்குப் பின்வருமாறு புத்தி புகட்டுவான் ஆயினன்.

**விளக்கம்**

காவலன் அவற்குப் புகட்டிடுவதானன் என முடிக்க. மாத் தகைய வேந்தன் - பெரும் தகுதியையுடைய இறைவன், எல்லாம் வல்ல இறைவன். மதிபுகட்டல் - புத்திபுகட்டல். காத்து - காப்பாற்றி. அவன் ÷ கு = அவற்கு. ஏகாரம் அசைநிலை.

மீக்குலவு முக்திநக ரத்திறைவன் மேனுள்
கோக்குமர னேப்பலி கொடுத்துநமை வேண்டி
வாக்குமனம் எட்டரிய மாபர சுகத்தை
ஆக்கினர் அதன்னருமை யார்புகல வல்லார் (34)

**உரை**

மேலாய முத்திநகரத் திறைவனுகிய ஆண்டவன் நமக்கா கத் (நமைவேண்டி) தம்முடைய குமாரனுகிய இயேசுவை நமக் காகப் பலியிட்டு, சொல்லுக்கும் மனதுக்கும் அதிதமான முத்தி என்னும் பெரும் பேரானந்த சுகத்தை உண்டாக்கித் தந்தார். அவ் அருமைப்பாட்டை யாரோ புகலவல்லவர்?

**விளக்கம்**

மீ : மேல். மீ ÷ குலவு = மீக்குலவு - மேலாக விளங்கும். மேல் + நாள் = மேனுள். ல்ந் > ன். எட்ட + அரிய = எட்டரிய, அதிதமான. பரசுகம் - மேலான சுகம்.

இத்தகைய சிற்சுகம் இயைந்திட விழைந்தோர்
பித்துலக நச்சுறு பிராந்தியை விடுத்தே
செத்தொழியு மாறிழி யுடற்குவரு சேதம்
எத்துணைய வாயினுமொ ரெட்டுணையு மெண்ணுர் (35)

[செத்து ஒழியுமாறு இழிஉடற்கு வருசேதம்
எத்துணையவாயினும் ஓர் எள்துணையும் எண்ணுர்]

உரை

இத்தன்மையான பரசுக முத்தியின்பம் விழைவோர் விசார்த் தன்மையான இவ்வுலக இன்பத்தை விரும்பும் மயக்கம் (பிராந்தி) நீங்கி, இழிவான இந்த உடல் செத்தொழியும்படியான சேதங் கள் எவ்வளவுதான் பெரிதாக எதிர்ப்படினும் ஓர் எள்ளளவும் கவலைப்பட மாட்டார்கள்.

விளக்கம்

சித் ÷ சுகம் = சிற்சுகம், மெய்யறிவால் ஏற்படும் சுகம். சித்(து)- மெய்யறிவு. நச்சுறுதல் - விரும்புதல். இது முதல் ஐந்து பாடல் களால் விண்ணக யாத்திரையில் எத்தனையோ விபரீதங்களையும் வில்லங்கங்களையும் கண்டும் மனந்தளராத மாமுனிவர் சிலர் உதாரண புருஷர்களாகக் காட்டப்படுகின்றனர்.

உகப்புறு பெருங்கிளை யொடேயுரிமை யுள்ள
இகப்பயன் எவற்றையும் இகந்திறைவ னுக்கே
அகப்பலி கொடுத்தனன் அதன்றியொரு பேரும்
மகப்பலி கொடுக்கவும் மறுத்திலனேர் வள்ளல்
(36)

உரை

ஒப்பற்ற பெருவள்ளலாகிய ஆபிரகாம் (இறைவன் கட் டளைப்படி) விருப்புக்குரிய தன் பெரும் இனத்தாரோடு தனக்கு உரிமையான இவ் உலக நன்மைகள் யாவற்றையும் விடுத்து ஆண்டவனுக்கே தன் இதயத்தைக் காணிக்கையாக அளித் தான். அன்றி, தனக்கு ஒரே பேருன மகவையும் இறைவனுக் குப் பலி கொடுக்க அவன் தயங்கவில்லை.

விளக்கம்

இகபரசுகம் அனைத்தையும் இறக்க அவன் தயங்கவில்லை. தன் ஒரேயொரு மகனுன ஈசாக்கை இறைவனுக்கு காணிக்கை கொடுக் கவும் மறுக்கவில்லை. தனக்கென உள்ள தன் மனதையுமே இறை வனுக்குக் காணிக்கையாக்கி விட்டான்.

கிளை - இனத்தான், இகப்பயன் - இம்மையின்பம். இகம், இம்மை : இப்பிறப்பு. இகத்தல் - கடத்தல், துறத்தல். **அகப்பலி மகப்பலி** : இரண்டாம் வேற்றுமைத் தொகைத் தொடர்கள். ஒரு

பேறு - ஒரேயொரு பேறு, ஒரேயொரு மகன். ஓர் வள்ளல் - ஒப்பற்ற வள்ளல். ஓர் - ஒப்பற்ற.

ஆபிரகாம் ஆண்டவன் ஆணைப்படி தன் தாய்நாட்டையும் இனத்தையும் துறந்து கானான் பிரதேசத்திற்குச் சென்றான்; தன் ஒரேயொரு மகனை ஈசாக்கை மோரியா தேசத்து மலையொன்றில் கர்த்தருக்குப் பலியிட இசைந்தான் என்பது கதை. பிள்ளைக் கறி யமுது வைத்த சிறுத்தொண்டரின் பக்தி நிலையை இங்கே காண முடிகிறது.

இந்நிலம் வியந்திடும் எகிப்திறைமை பூண்ட
மன்னுரிமை யாவையும் மனக்கொள வரைந்தாண்
டின்னலுறு தன்கிளையோ டெண்ணில்பல துன்பும்
பன்னரிய நிந்தையும் உழந்தனன்ஓர் பத்தன் (37)

**உரை**

ஒப்பற்ற அடியானுகிய மோசே இவ்வுலகமே வியக்கும்படி யான எகிப்து நாட்டின் இறைமைத் தன்மைக்குரிய அரசுரி மையை மனதிலிருந்து நீக்கி, அவ் எகிப்தில் பெருந்துன்பமுற்ற தன் இனத்தவரோடு எண்ணற்ற பல துன்பங்களையும் வாய் விட்டுச் சொல்வதற்கரிய அவமானத்தையும் அநுபவித்தான்.

**விளக்கம்**

மன்உரிமை - மன்னனுக்குரிய உரிமை, ஆட்சியுரிமை. மன் - மன்னன். வரைந்து - நீக்கி, வெறுத்து. ஆண்டு - அவ்விடம், இங்கே எகிப்து. பன்ன + அரிய = பன்னரிய. பன்னுதல் - வாய்விட்டுக் கூறு தல். உழத்தல் - அனுபவித்தல்.

மோசே இஸ்ரவேலர் இனத்தில் பிறந்தவன்; எகிப்து வேந்தன் அரண்மனையில் வளர்ந்தவன். அதனால் அந்நாட்டுரிமை அவனுக்கு உரிமையாயிற்றும். ஆனாலும், தன் இனத்தவர் எகிப்தில் பட்ட துன்பப்பாடுகளைச் சகியாதவனாய், தானும் இன்னல்மேல் இன்ன லுக்கு ஆளாகி அவர்களை அடிமைத்தனத்திலிருந்தும் விடுவித்தான்.

துங்கவுல காதிபர் துணைப்பதம் அலாலென்
அங்கமரி யப்பெறினும் ஆவியுகும் ஏனும்
னங்கன விலும்பிற இறைஞ்சுகிலன் என்னைச்
சிங்கமுறு வெங்குகை முடங்கினன்ஓர் தீர்க்கன்
(38)

உரை

ஓர் தீர்க்கதரிசியாகிய தானியேல் உயர்ந்த முத்தியுலகிற்கு அதிபதியாகிய ஆண்டவன் இரு பாதங்களையும் அன்றி, என் னுடல் துண்டுதுண்டாக அரியப்பெற்றாலும், என்னுயிரையே இழக்க நேர்ந்தாலும் என் கனவிலுமே பிற தெய்வங்களை வணங்கமாட்டேன் என்று சிங்கம் தங்கும் கொடிய குகையில் முடங்கிக் கிடந்தான்.

விளக்கம்

துங்கம் - உயர்வு. உலக + அதிபர் = உலகாதிபர். துணைப் பதம் - இரு பாதங்கள், துணை - இரண்டு. இறைஞ்சுகிலன் : எதிர் மறை வினைமுற்று. என்ன : செய்யா என்னும் வாய்பாட்டு வினை யெச்சம்.

தானியேல் முக்காலங்களையும் உணர்பவன் ஆனதினால் தீர்க் கன் ஆனான். தீர்க்கன் - தீர்க்கதரிசி. தீர்க்கம் - தூரப்பார்வை.

"உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே" எனக் கனிந்துபாடிய மணிவாசகனாரின் பக்தி வைராக்கியத்தைத் தானியேலிடமும் காண்கிறோம். தானியேல் யூதேயா நாட்டு இள வரசன். நேபுகாத் நேச்சார் என்னும் மன்னனால் சிறைப்பிடிக் கப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டுவரப்பட்டவன். அங்கும் பொற் சிலையை வணங்க மறுத்து அரச ஆணையை மீறினபடியால் சிங் கத்தின் குகையில் தள்ளப்பட்டான். ஆனாலும், தெய்வத் திருவரு ளால் சிங்கம் அவனை ஒன்றும் செய்யவில்லையாம். யாவையும் வழி விலகிக் கொடுத்த திருநாவுக்கரசர் இங்கு நிழலிடுகின்றார்.

இந்தனம் அடுக்கிய இருங்கொடிய சூளைக்
கொந்தழல் மடுத்தவிறை கோபமென மூண்டு
வெந்தெரிய அத்தழலில் வீசியெறி போதும்
சிந்தனை கலங்கிலர் திடங்கொளும் முச்சித்தர்(39)

உரை

மன உறுதிமிக்க சித்தர்கள் மூவர், விறகுகளைப் படை படையாக அடுக்கி (நிவைத்த), பெரிய பயங்கரமான காள வாயின் நிச்சுவாலையானது பிரபஞ்ச மெல்லாம் வியாபித்த- இறைவனது கோபத்தைப் போல மேலும் மேலும் மூண்டு சுற் றுடலெல்லாம் வெப்பத்தை உண்டாக்கி எரிய அச்சுவாலைத் தியில் வீசி எறிந்தபோது மனம் கலங்கினான் இல்லை.

விளக்கம்

இந்தனம் - விறகு, சூலை - காளவாய், கொத்து + அழல் = கொத்தழல். எதுகை நோக்கி கொத்து கொந்து ஆனது, கொத்துக் கொத்தாகக் கொழுந்துவிட்டெரியும் தீ சூளையின் கொடுநெருப்புக்கு இறைவன் சினம் உவமை. மடுத்தல் - செறிதல், வியாபித்தல்.

சுண்ணும்பறையில் திணிக்கப்பட்ட திருநாவுக்கரசர் போன்றவர்கள் இங்குக் கூறிய சித்தர் மூவரும்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் அடியார்கள் மூவரும் தானியேல் என்பவரைப் போல் பாபிலோனுக்குச் சிறைக் கைதிகளாகக் கொண்டுவரப்பட்டவர்கள். சிலையை வணங்காத காரணத்தால் தண்டனையாகச் சூளையில் வீசப்பட்டார்கள். அப்பொழுதும் அவர்கள் கலங்கவில்லை.

அவ்விய மனத்தினர் அமார்க்கவெறி கொண்டு
வல்லிய மெனக்குழுமி வன்கன்மழை சிந்திக்
கொல்லிய மலைந்தும்ஒரு கோட்டமில னாகி
நல்லியல் மொழிந்துயிர் விடுத்தனனோர் நம்பன்
(40)

உரை

ஒரு பெரியோன் (ஓர் நம்பன்) பொரு(ண்)மை கொண்ட மனத்தினனும், தீய வழிகளில் வெறிகொண்டு, புலிக்கூட்டங்களைப் போல வளைந்துகூடி மழைபோல இடைவிடாது கற்களால் வீசி அவனைக் கொல்வதற்காக எதிர்த்தபோதும் மனக்கோணல் அற்றவனாகி அவர்களுக்காக இறைவனிடம் நயவார்த்தைகளைக் கூறித் தம் உயிரை விட்டான்.

விளக்கம்

இபபடிச் செய்தவன் இஸ்தேவான். இஸ்தேவான் அப்போஸ்தலர்களால் தெரிந்து கொள்ளப்பட்ட விசாரணைக்காரர் எழுவரில் ஒருவன். இயேசுநாதரைக் குறித்து உறுதியாகச் சாட்சி கொடுத்தவன். அதனால பகைவர்கள் அவனை நகரத்திற்குப் புறம்பாகத் தள்ளிக் கல்லெறிந்து கொன்றார்கள் *

---

*அப்போஸ்தலர்: இயேசுநாதரின் முதற் பன்னிரு சிடர்கள். தம்மைத் தொடர்ந்து பின்சென்ற சிடர்களில் பன்னிருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு அப்போஸ்தலர் எனப் பெயரிட்டார் இயேசு. விசாரணைக்காரர்: இயேசு உயிர் நீத்தபின் இயேசுவைக் கண்ட சாட்சிகளாகப் பக்தி விசாரணை செய்யப்பட்டவர்கள்.

புறிக்கூட்டம் போல் அவனைச் சுற்றிக் கல்லெறிந்தபோதும் கலங்கினனில்லை. மாருக அவர்களை மன்னிக்கும்படி இறைவனை மன்றாடினன்:

அவனை, முழங்காற்படியிட்டு ஆண்டவரே. இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னன். இபபடிச் சொல்லி நித்திரையடைந்தான். [அப் .7 : 60]

அவ்வியம் - அழுக்காறு, பொருண்மை. அ + மார்க்கம் = அமார்க்கம் - துன்மார்க்கம். வல்லியம் - புலி. குழுமி - கூடி. கன்மழை - கல்வீச்சாகிய மழை : உருவகத் தொடர். நல்லியல் - நல்வார்த்தைகள். கோட்டம் - களங்கம், சலனம்.

நாடுநகர் காடுகடல் ஆறுபல நண்ணி
நீடுபல மோசம்,அடி, நிந்தை,எறி, காவல்
கூடம்எனும் மாகொடிய கூறரிய சாவின்
பாடுபல பட்டனன்ஓர் பக்திவயி ராக்கியன் (41)

உரை:

கிறிஸ்துவிடம் பக்தி வைராக்கியம் கொண்ட பவுல் எனும் அடியான் நாடு, நகரம், காடு, கடல், ஆறு ஆகிய பலவற்றையும் எதிர்ப்பட்டு, நீண்டகாலமாகப் பல துன்பங்களையும், வசைச் சொற்களையும், அடிகளையும், நிந்தைகளையும், எறிகளையும், சிறைகளையும் அநுபவித்து மிகக் கொடிய சொல்லுதற்கரிய சாவுக்குக் காரணமான பல துன்பங்களிலும் படாதபாடு பட்டான்.

விளக்கம்

காவற்கூடம் - சிறைச்சாலை. அப்போஸ்தலர்களுக்குப் பின் புறசாதிகளுக்குள் கிறித்தவ சமயத்தை நிலைநாட்டியவன் பவுல். அதனலே பல துன்பங்களுக்கு ஆளானன்.

அம்புவி யுவந்தலை அகந்தையர் குரைத்த
வம்புமொழி யைப்புரி உபாதியை மதிக்காது
உம்பர் மகிமைத்திறம் உவந்துயிர் விடுத்தார்
செம்பொருள் தெரித்தகுரு தேசிய ஜெகத்தி (42)

**உரை**

உலகின்பத்தை விரும்பி அலைகின்ற ஆணவ வசப்பட்ட மக்கள் நாய்போல் குரைத்துக் கூறிய இழிவான கட்டுக் கதை களையும் அவர்கள் செய்த உபத்திரவங்களையும் பொருட்படுத் தாது விண்ணக வாழ்வின் பெரு மகிமையை விரும்பித் தன் உயிரை வெறுத்தார் மெய்ப்பொருளை மண்ணுலகில் விளங்க வைத்த பரமாசாரியராகிய கிறிஸ்து பெருமான்.

**விளக்கம்**

**அலை அகந்தையர், புரியுபாதி:** வினைத் தொகைகள். அகந்தை - ஆணவம், செருக்கு. உபாதி - உபத்திரவம். உம்பர் - விண்ணகம். செம்பொருள் - மெய்ப்பொருள். தேசிகர் - ஆசிரியர். குருதேசிகர் - ஆசிரியருக்காசிரியர், பரமாசாரியார்.

கல்லெறி கடும்சிறை கசப்புமொழி கட்கம்
நல்குரவு வாரடியில் நைந்துயிர் நடுங்கப்
புல்லரிய கான்புதர் பொருப்புமுழை புல்லி
எல்லையில் கடுந்துயரம் எய்தினர் அநேகர் (43)

**உரை**

அநேக அடியார்கள் கல்லெறிகள், கொடிய சிறைவாசம், வெறுக்கத்தக்க இழிமொழிகளாகிய வாள், வறுமை, கசையடி ஆகியவற்றினால் துன்புற்று உயிர் நடுங்கும்படியான செல்லு தற்கரிய காடு, பற்றை, மலை, குகை, இவைகளிலே போய்த் தங்கி எல்லையற்ற கொடுந் துன்பங்களை அடைந்தார்கள்.

**விளக்கம்**

கசப்பு மொழி கட்கம் - கசப்பு மொழியாகிய கட்கம் : உரு வகத் தொடர். கட்கம் - வாள். உள்ளத்தை அறுத்தறுத்துத் துன்பப் படுத்துவதாதலின் கசப்பு மொழி வாள் எனப்பட்டது. புல்லுதல் - நெருங்குதல், சேருதல், செல்லுதல். கான் - காடு. புதர் - பற்றை. முழை - குகை.

இன்ன விதமாக விசுவாசிகள் இகத்தில்
பன்னரிய பாடுபல பட்டனர் பரத்தே
மன்னுமகி மைக்கென வதைந்துயிர் மடிந்தார்
இந்நில மிசைக்குருதி யேகரி இயம்பும் (44)

உரை

இந்த விதமாக மெய்யடியார்கள் இகவாழ்விலே நினைத்தற் கரிய பல இடர்களையும் எய்தினர்கள். பரவாழ்வில் நிலைபெறும் மகிமைக்காக உடலம் வதங்கி மடிந்தார்கள். அவர் பட்டபாடு களுக்கு இவ்வுலகில் அவர்கள் சிந்திய இரத்தமே சாட்சியாகும்.

விளக்கம்

விசுவாசிகள் - இறைவனில் விசுவாசம் உடையவர்கள். இகம் - இவ்வுலகு. பரம் - மறு உலகு, மேலான உலகு. குருதி - இரத்தம். கரி - சாட்சி. மிசை : ஏழாம் வேற்றுமை உருபு.

மற்றிதனை அற்பமும் மதித்திலன் மென்னெஞ்சன்
முற்றுலக சாலவள றாடுமுழு குற்றுன்
துற்றுமோர் நறுங்கனி எனச்சுவை விழைந்தே
பற்றியெரி யுஞ்சுடர் விழும்பல பதங்கம் (45)

உரை

மிகச் சமீபத்திலுள்ளதோர் நல்ல கனி என நினைந்து அத னைச் சுவைக்க விரும்பி, மூண்டு எரிகின்ற தீச்சுடர்களில் பறவை யானது விழுகின்றது. அதேபோல் விண்ணக வாழ்வை விழை கின்றவன் இடர்மேல் இடர்களை அநுபவிக்க வேண்டி வரும் என்ற பிறர் அநுபவத்தைச் சற்றுமே பொருட்படுத்தினானில்லை; உலக ஆசை என்கின்ற பெரும் சேற்றின் அடித்தளத்திற்குள் ளேயே முற்றுக அமுங்கிவிட்டான்.

விளக்கம்

'பாவம், யார் என்ன செய்யலாம்' என்பது குறிப்புப் பொருள். மிகச் சமீபத்திலேதான் நல்லதோர் கனி காணப்படுகின்றது எனச் சமீபத்திலுள்ள மூண்டெரியும் தீப்பொறியை நினைத்துக் கொண்டு பறவை அதன்மேல் விழுந்து பொசுங்கிவிடுகிறது. துறுதல் - நெருங் குதல். இங்கு சமீபத்தைக் குறிக்கும். விபரீத அறிவுள்ளவன் மோட்ச எண்ணங்கொள்ள இயலாது. மென்னெஞ்சனும் உலக ஆசை யென்னும் சேற்றினைத் தெளிந்த நீரோடை எனக்கருதி அதற்குள் இறங்கி விடுபட முடியாமல் அமுங்கிவிட்டான். ஒன்றை இன் னென்றாக நினைப்பது விபரீத அறிவு.

இச் செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி. உவமையையும் பொருளையும் உவம உருபினால் இணைக்காமல் தனித்தனியாக நிறுத்திவிடுவது எடுத்துக்காட்டுவமை எனப்படும். அது என்ற

சுட்டுச் சொல்லுடன் போல என்ற உவம உருபையும் சேர்த்து இரு வாக்கியங்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும்.

தீப்பொறியைக் கனி எனக் கொள்வது மயக்க அணியாகும். அளறு - சேறு. சால + அளறு = சாலவளறு. அளறு ÷ ஊடு = அளறூடு. பதங்கம் - பறவை.

*மிச்சின்மிசை லௌகிக விகாரமுறு குக்கல்*
*சிச்சியென ஓடுமது தேர்கிலை திகைத்திட்டு*
*அச்சுறு குரைப்பைநனி யஞ்சினை அமார்க்கப்*
*பிச்சரென ஏகினை பிறங்கல்வழி பேணி* (46)

**உரை**

எச்சிலை உண்ணுகின்ற லௌகிகன் என்னும் இயல்பான தன்மையற்ற பெருநாயைச், சீ! சீ! என விரட்டினால் அது ஓடிவிடும். அதனுடைய குலைப்புச் சத்தத்திற்குப் பெரிதும் அஞ்சிவிட்டாய். நீ நெறியதனிற் சேரும் பித்தர்களைப் போல் நீயும் லௌகிகன் சொன்ன மலைவழியை விரும்பிச் சென்று விட்டாய்.

**விளக்கம்**

லௌகிகம் என்பது இயல்பான தன்மையைக் கொண்டதன்று. மாறுபாடான இயல்புகளைக் கொண்டது. விகாரம் - இயல்பான தன்மை யில்லாதது. மாறுபாடான தன்மைகளைக் கொண்டது. லௌகிகக் குக்கல் - லௌகிகம் என்னும் நாய். குக்கல் - நாய். நாய் எப்பொழுதும் மிச்சத்தையே உண்ணும். மிச்சில் - மிச்சம் - மிசைதல் - உண்ணுதல். மிச்சில் + மிசை = மிச்சின்மிசை.

லௌகிக உணர்வையே லௌகிகன் என்னும் கதாபாத்திரமாக உருவகிக்கப்பட்டது. நாயை விரட்டினால் அது ஓடிவிடும். மிரண்டால் அது நம்மை வழிதவறி ஓடச் செய்துவிடும். 'நீ (ஆத்துமவிகாரி) அதற்குப் பயந்துவிட்டாய். அதனால் நீ பாதை தவறி விட்டாய்' எனக் கடைகாவலன் கூறினான்.

மலை என்றது சீலம் மலையையும் மலைவழி என்றது மலைப் பிரதேசத்தில் தோன்றிய நியாயப் பிரமாண நெறிமையையும் குறிக்கும். நியாயப் பிரமாண நெறி முத்திக்கு யாரையும் கொண்டு செல்லாததால் அந்நெறி அமார்க்க நெறி எனவும், அந்நெறிச் செல்வோர் பிச்சர் எனவும் சொல்லப்பட்டார். பிச்சர் - பித்தர்.

அந்நெறி பிடித்துயிர் அவிந்தவர் அநேகர்
செந்நெறி கதித்தசிம யஞ்சிதறு தீயால்
தொன்னெறி விளக்குசுவி சேடநெறி தூய
இந்நெறி விடுத்தவர் ஈடேறும்வகை இன்றுல்(47)

**உரை**

அந்நெறி பிடித்து – அந்த அமார்க்க நெறியாகிய நியாயப் பிரமாண நெறியிற் சென்று, செந்நெறி கதித்த சிமயம் சிதறு தீயால் - தீய வழிகள் அதிகம் உள்ள சிலுப் மலையிற் சிதறுண்ட தீயினல், உயிர் அவிந்தவர் அநேகர் – தம் உயிரை எரித்து நாசமாக்கிக் கொண்டவர்கள் பலராவர் –

தொன் நெறி விளக்கு சுவிசேட நெறி – (வாழ்வுக்குகந்த பத்திரமான) பழைய பாதை மெய்ப்பொருளை விளக்கும் சுவி சேடப் பாதையாகும். தூய இந்நெறி விடுத்தவர் ஈடேறும் வகை இன்று – தூய்மையான இத்தொன்னெறியிற் செல்லாத வர் ஆன்ம ஈடேற்றம் எய்துவது (ஒருபொழுதும்) இல்லை.

**விளக்கம்**

நியாயப் பிரமாண நெறியிற் சென்றவர் இரட்சிக்கப்படாது, பாவத்தீயாற் பொசுங்கிவிடுவர். மாருக, சுவிசேட நெறியிற் சென்ற வர் இரட்சிக்கப்பட்டு ஆன்மசுகம் எய்துவர்.

செந்நெறி - சிவந்தநெறி தீநெறி செம்மையான நெறியன்று. சிமயம் - மலை உச்சி, பெருமலை, பாவமென்னும் பெருமலை தொன்மை + நெறி = தொன்னெறி. இ + நெறி = இந்நெறி.

வெவ்விய கராவயிறு புக்குவுயிர் மீண்ட
செவ்வியினை ஒத்திவண் இறுத்தனை சிறுரைக்
கௌவியலை பூசைமுறை காண்டியது போலும்
தைவிக மகாகிருபை தாங்குவது நம்மை (48)

**உரை**

வெவ்விய கராவயிறு புக்கு – கொடிய முதலை வயிற்றுள் போய், உயிர் மீண்ட செவ்வியினை ஒத்து – உயிர் பிழைத்த தன்மை போன்று, இவண் இறுத்தனை – இத்திட்டிவாயிலை வந்தடைந்தாய்.

(ஆத்துமவிகாரியே!) நம்மை தைவிக மகாகிருபை தாங்குவது – அடியோமாகிய நம்மை தெய்வப் பெருங்கருணை (நீநெறிச் செல்லாமற்) காப்பாற்றிக் கொள்வது. சிறுரைக் கவ்வி அலை பூசைமுறை போலும் – (தான் போகும் இடமெல்லாம்) தன் குட்டிகளை வாயிற் கவ்விக்கொண்டு அலையும் பூனையின் முறையைப் போன்றது. அது காண்டி - அதனை நீ உணர்ந்துகொள்.

**விளக்கம்**

முதலை வாயிற் புகுந்தவர் மீள்வது இல்லை. அதுபோல் சீஞ்ய மலையிற் சென்றவர் மீள்வதும் இல்லை. நீயோ அம்மலைவழி சென்றும் உயிர் பிழைத்து வந்துவிட்டாய் நீ பாக்கியவான்!

பூனை தான் போகுமிடமெல்லாம் தன் குட்டிகளை வாயிற் கவ்விக்கொண்டு செல்லுகின்றது. இதுபோல் ஆண்டவனும் நம்மைக் காப்பாற்றுகிறான். ஆண்டவனுகிய பூனை (ஆட்டுக்) குட்டியாகிய உன்னைப் பத்திரமான இடத்திற் சேர்த்துவிட்டது. இது **தைவிக மகாகிருபை.** தைவிகம் · தெய்விகம்.

பூனை குட்டிகளை வாயாற் கவ்விக்கொண்டு போய் பத்திரமான இடத்திற் சேர்க்கும் முறைமை. **'மார்ச்சாலமுறை'** என்று கூறும் கைவல்யநவநீதம் என்னும் வேதாந்த நூல்.

ஆதலின் அருந்துணைவ ஆற்றரிய சும்மை
சோதனை அலக்கண் இடர் துற்றிஅடு போதும்
ஆதிமுதல் வன்திரு வருட்டுணை அவாவி
மேதகைய ஜீவநெறி விட்டுவில கேலே (49)

**உரை**

ஆனதினால், அரிய சகோதரனே! பொறுத்தற்கரிய பாரம், சோதனை, துன்பம், அபாயம் ஆதியன உன்னை நெருங்கி வருத்துகின்ற பொழுதிலும் ஆதி முதல்வனுகிய ஆண்டவனின் திருவருளே துணையென அதனை இச்சித்து, மேன்மை மிகுந்த முத்தி நெறியைப் பின்பற்றுவதல்லது அதனை விட்டுவிடாதே.

**விளக்கம்**

துணைவன், சகோதரன், நண்பன். ஆற்ற + அரிய = ஆற்றரிய. ஆற்ற - சகிக்க. சு(ம்)மை - பாரம். விலகேல் : எதிர்மறை முன்னிலை யொருமை வினைமுற்று. ஏ : அசை.

என்றினைய வாறுசொலி யெம்பியிது மார்க்கம்
வென்றியர சன்பணி விதிப்படி. பிதாக்கள்
நன்றியறி தீர்க்கருயிர் நல்குநம் மிளங்கோ
பின்றையடி யாரிவர் புதுக்கினர் பிறங்க (50)

**உரை**

என்று இப்படியெல்லாம் சொல்லி, தம்பி! இதுவே சரியான மார்க்கம். தீமைகள் அனைத்தையும் வெற்றிகண்டு நன்மை தரும் வெற்றி வேந்தனுகிய ஆண்டவன் கட்டளைப்படி ஆபிரகாம் முதலான பூர்வ பிதாக்களும், நன்மையை அறிந்து கூறும் தானியேல் முதலான தீர்க்கதரிசிகளும், மன்னுயிருக்காக தன்னுயிரைத் தியாகித்த இளங்கோவாகிய இயேசுநாதரும், இயேசுவிற்குப் பிற்பட அவதரித்த மெய்யடியார் பலரும் இந்த ஜீவநெறி மேலும் விளக்கமடையும்படியாகப் புதுக்கிச் செப்பனிட்டுள்ளனர். ஆகவே நம்பிக்கையான பாதை இப்பாதை.

**விளக்கம்**

இனையவாறு - இவ்வாறு, எம்+தம்பி 'எம்பி' என மருவிற்று; அண்மை விளி, வென்றி - வெற்றி, பணிவிதி - பணித்த கட்டளை. விதித்தொகை. இளங்கோ - இளவரசன், கிறிஸ்து பெருமான், பின்றை - பின்பு. பிறங்க - விளங்க.

நேர்வழி! நெருக்கவழி! நின்மலன் நகர்க்குச்.
சேர்வழி! திகைப்பில்வழி! ஜீவவழி! சீர்சால்
ஓர்வழி! இதன்றியிலை யுண்மைவழி கும்பிப்
பேர்வழிய துற்றலை பிராந்தரும் அநேகர் (51)

**உரை**

நேர்மையான பாதை! ஒடுக்கமான பாதை! நிமலனது முத்தி நகரத்தைச் சேர்க்கும் பாதை! திகைப்பு ஏற்படாத, ஏற்படுத்தாத பாதை! உயிரோட்டமான பாதை! சீர்மை மிகுந்த ஒப்பற்ற பாதை! இதுவன்றி உண்மைவழி வேறு இல்லை. இப்படியிருக்க நரகத்திற்கிட்டுச் செல்லும் பெருஞ்சாலையிற் (அகலப்பாதை) சென்று தடுமாறி அலைகின்ற பித்தர்களுமோ அநேகர்.

**விளக்கம்**

கும்பிப் பேர்வழி - நரகப் பெருவழி. பிராந்தர் - பிராந்தியை உடையவர். பிராந்தி - மயக்கம், பித்தம்.

இ - யா - ர

## (9) ஆத்துமனிகாரியின் வேண்டுகோள்

இக்குறி மனக்கொடினி யேகுகென வுள்ளம்
நெக்குருகு நேயஞெடு வேதிய நிகழ்த்துந்
தக்கநெறி சார்வலைய தாங்கரிய தாமிப்
பொக்கணம் விழுத்திலது புண்ணிய முனக்கே (52)

['இக்குறி மனக்கொடுஇனி ஏகுக' என உள்ளம்
நெக்குஉருகு நேயஞெடு வேதியன் நிகழ்த்தும்
தக்கநெறி சார்வல்,ஐய தாங்கஅரியதாம் இப்
பொக்கணம் விழுத்தில் அதுபுண்ணியம் உனக்கே]

**உரை**

இவ் அடையாளத்தை நன்கு மனதிற்கொண்டு இனி உன் யாத்திரையைத் தொடங்குவாயாக என்று சொல்ல, (அவ் வாறு சொல்லி) இதயக்கனிவுடன் நின்ற கடைகாவலனுடு கிறித்தியான் பின்வருமாறு கூறுவான். 'ஐயனே! தக்க நெறி யாகிய இந்த ஜீவ நெறியிலேயே இனிச் செல்வேன். (அதற்கு முன்) என்னைத் தாங்குதற்கரியதாகிய இப்பாரச்சுமை இன்னும் விழுந்திலது. என் முதுகிலுள்ள இப்பாரத்தை (பொக்கணம்) விழுத்தி விடுவீராயின் அது பெரிய புண்ணியம். அப்புண்ணியம் உனக்கே.

**விளக்கம்**

சார்வல் : தன்மையொருமை வினைமுற்று. ஏகுக + என = ஏகு கென. ஏகுக : வியங்கோள் வினைமுற்று.

வேறுநினை வில்லைவெரிந் மீதறவும் மேன்மேல்
ஏறுசுமை யான்மிக இளைத்தனன் எனக்கோர்
ஆறுதலும் இல்லை.இனி, அஞ்சலென நின்போல்
தேறுதல் செய்வாரும் எதிர்வார்கொல்?

[தெரியேனால் (53)

**உரை**

எனக்கு வேறொரு நினைவுமில்லை. என் முதுகின் மேலிருந்து மூன்றாக மேலும் மேலும் என்னை வருத்துகின்ற பாரத்தினால் யான் இளைத்தே விட்டேன். அதனால் எனக்கோர் மன நிம் மதியும் இல்லை. இனி, பயப்படாதேயென உன்னைப் போல் ஆறுதல் அளிப்பாரும் எதிர்ப்படுவாரோ என அறியேன்.

**விளக்கம்**

வெரிந் = முதுகு. அறவும் - முழுவதுமாக, முற்றுக, மிகுதியும், எதிர்வார் - எதிர்ப்படுவார். கொல் வினுப்பொருளது. ஆல் : அசை.

## (10) கடைகாவலன் பதில்

*யாதினி இயற்றுவல் இரட்சைபெற என்னு*
*ஓதலும் மலங்கலை இருங்குருசு உயர்த்த*
*மாதலம் அடுக்கிலுன் வன்சுமடு வல்லே*
*போதரும் அலாதொருவர் போக்கமுடி யாதார்*
*(54)*

உரை

'இரட்சிப்புப் பெறுவதற்கு இனி யான் என்ன செய்வேன்' என்று கிறித்தியான் சொல்லுதலும், 'வருந்தாதே. (இனியுன் யாத்திரைப் பாதையிலுள்ள) பெரியதோர் சிலுவை நாட்டப் பட்ட பேராலயத்தைச் சேர்ந்தால் (உன் முதுகில் உன்னை வலிமையாக அழுத்திக்கொண்டிருக்கும்) கொடிய பாவச்சுமை விரைவாகத் தன்பாட்டிற் கழன்றுவிடும், அப்படியின்றி வேறெருவரால் அதனைப் போக்க முடியாது என்று கூறினன் கடை காவலன்.

**விளக்கம்**

மகிமை வாய்ந்த பெருமைக்குரிய சிலுவையாலே மாத்திரம் உன் பாவம் தொலையும். இரட்சிப்பும் பெறுவாய் வேறு மார்க்கம் இல்லை என்பது சாரம்.

இரட்சை - இரட்சிப்பு. என்னு - என்று. 'செய்யா' என்னும் எச்சம். மலங்கல் - வருந்தல், சலித்தல். வன்சுமடு - கொடியபாவம். அலாது : அல்லாது என்பதன் தொகுத்தல் விகாரம். ஆல் : அசை.

*இப்பகல் கழிந்திடுமுன் இந்நெறியின் ஓர்சார்*
*மெய்ப்பொருள் விளக்குபவன் வீடெதிர்வை அங்குற்று*
*அப்பனுவ லாளனை டமர்ந்து வினவுங்கால்*
*எப்பரிசும் நன்குற இசைப்பன் இயல்பென்னு-(55)*

**உரை**

கடைகாவலன் மேலும் கூறியதாவது: இந்தப் பகல்வேளை நீங்குதற்கு முன்பாக இப்பாதையின் ஒரு பக்கத்தில் மெய்ப் பொருளுக்கு விளக்கம் தருபவனுகிய வியாக்கியானியின் இருப் பிடத்தை எதிர்ப்படுவாய். அங்குச் சென்று அவ் அறிவாள ருடன் இருந்து (உன் பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு) கேட் டால் எவற்றின் இயல்பையும் விளக்கமாக விரித்துரைப்பான். அது அவன் இயல்பாகும் என்று –

**விளக்கம்**

ஓர்சார் - ஒருபக்கம் எதிர்வை - எதிர்ப்படுவாய் பனுவலாளன் - நூலாளன், அறிஞன். பனுவல் - நூல. ஐயந்திரிபற நூல்களைக் கற்ற அறிவாளன் என்பது கருத்து. எப்பரிசும் - எத்தன் இயல்பும். பேதத்தின் மெய்ப்பொருளை விளக்கிக் கூறுபவன் வியாக்கியானி; வியாக்கியானம் செய்பவன்.

சோகமற நன்மொழி தொகுத்தினைய கூறி
ஏகுகென ஆசிவிடை ஈந்தனன். விகாரி
ஓகையொடும் அஞ்சலி ஒழுக்கமுறை நல்கி
மாகநக ராதிபனை வாழ்த்திவழி போனான் (56)

**உரை**

ஆத்தும விகாரியின் இதயசோகம் அற்றுப்போகும்படி நற் புத்திமதிகளையெல்லாம் சுருக்கமாக இப்படிச் சொல்லி 'சென்று வருக' என ஆசீர்வாதத்துடன் விடை கொடுத்தான். ஆத்தும விகாரியான கிறித்தவனும் மகிழ்ச்சியோடு வணக்கம் கூறும் முறையாக அஞ்சலி தெரிவித்து முத்திநகர் அதிபராகிய இறை வனை வாழ்த்திப் தன் யாத்திரையைத் தொடர்ந்தான்.

**விளக்கம்**

முதற்பாடலின் இறுதிச் சீராகவுள்ள என்னை - என்னும் வினை யெச்சம் இப்பாடலிலுள்ள ஈந்தனன் என்ற வினைமுற்றுடன் முடிந் தது. உவகை என்னும் சொல் ஓகை என மருவிற்று. மாகம் - ஆகாயம், வின். இங்கு முத்தியைக் குறிக்கும். மாகமாகிய நகர் - முத்தியாகிய நகர், முத்தி. வழிபோதல் - யாத்திரையைத் தொடர்தல்.